122

தொகுதி 10.] 1931ஞ் செப்டம்பர்மீ 1உ [பகுதி 8.

6 - OCT 1931

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியாது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 5-பாகம் விலை ரூபா 10-0-0

அமராவதி 2-ரூபா.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரி காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தனை ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான ப யும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின் றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மன மகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு மூடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவ களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்துகொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயுப் டிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

இரத்தினபுரி இரகசியம்

(5-ம் பாகம்)

ஓர் இனிய தமிழ் நாவல்

ஸ்ரீமான்

ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள்

எழுதியது.

186560
சென்னை-600 008

"ஆனந்த போதினி" பத்திராதிபர்

நா. முனிசாமி முதலியார் அவர்களால்

வெளியிடப்பெற்றது.

1931

காபிரைட் ரிஜிஸ்தர்] [விலை ரூபா 2

மதுரை:—என் சம்பந்தப்பட்டவரையில் நான் ஒருகாலும் நியாயத்தினின்றும் தவறமாட்டேன். எனக்கும் உங்களுக்கும் தந்தை ஒருவரே என்பது நிச்சயம். எனது தந்தையாகிய அருமைநாதம்பிரபு, பாவம், உங்கள் தாயை வஞ்சித்ததால் அம்மாது மனமுடைந்து விரைவில் இறக்கவேண்டியதாயிற்று. அத் தந்தையின் மூத்த குமாரன் என்னும் முறையில், தாயை இழந்து பரதேசிகளாய்ப்போன உங்களுக்கு, அவர் செய்யவேண்டிய உதவியை நான் செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே உங்களிருவரையும் நான் சகோதரிகளாகப் பாவித்து எனது அன்பைச் செலுத்த விரும்புகிறேன். நீங்களும் என்னைச் சகோதரனுகக் கொண்டால் எனக்குக் கிடைத்துள்ள பெரிய ஆஸ்தியை நாம் மூவரும் பங்கிட்டுக் கொள்வோம்.

மதன:—ஆ! என்ன தாராளம், என்ன நன்றி. இதைக் கேட்கும்போதே எனக்கு எவ்வளவு ஆனந்தமாய் இருக்கிறது தெரியுமா? நான் உன் உதாரகுணத்தை மெச்சுகிறேன். அடடா! இச்செய்தி ஒரு வருஷத்துக்கு முன் எனக்குத் தெரியாமற் போய்விட்டதே. அப்போதே தெரிந்தால் நான் இப்போதுள்ள நிலைமையில் இருக்க நேர்ந்திராது.

மதுரை:—எனது அன்புள்ள சகோதரி! அப்படியானுல் நீ சந்தோஷமான வாழ்க்கையை நடத்தவில்லையா?

மதன:—சகோதரா! ஆஹா! நான்மட்டும் கற்புநெறியினின்றும் சிறிதும் தவருதவளாயிருந்தால் எவ்வளவு சந்தோஷமாக இருப்பேன் தெரியுமா? ஆனுலும் இப்போது உன்னிடம் சில விஷயங்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதனுல் நீ என்மீது எவ்

வளவு குற்றம் சுமத்துவாயோ அவ்வளவுதூரம் அனு தாபம் காட்டவும் நேரிடும். நான் எதற்காக இந்த இரத்தினபுரிக்கு வந்தேனென்பதும், எப்படி ஏமாற்ற மடைந்தேனென்பதும் உனக்குத் தெரிந்த விஷயங் களே. இந்த ஏமாற்றம்தான் என்னை இப்போதுள்ள நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டது. சமய சந்தர்ப் பங்கள் என்னை எப்படி யெப்படியோ இழுத்துக் கொண்டு போகிறது. அதன்படி செய்வதல்லாமல் அபலையாகிய என்னால் செய்யக்கூடியது என்ன இருக் கிறது? தயவுசெய்து நிதானமாகக் கேள். என் சரித் திரத்தைத் தொடர்ச்சியாகக் கூறுகிறேன்.

இவ்வாறு கூறிக்கொண்டே மதனவல்லி தன் சரித் திரத்தையெல்லாம் விவரமாகக் கூறினாள். மதுரைநாயகம் பிரபுவும் மிகவும் கவனத்துடனும் அனுதாபத்துடனும் அதைக்கேட்டான். அவள் இரத்தினபுரிக்கு வந்ததும் ஏமாற்றமடைந்தவிதத்தையும் பிறகு அவளைப் பத்மாவதி ஒரு புதியமாளிகையில் அமர்த்தியதையும், செல்லப்பப்பிர புவை மணந்துகொள்ள நேர்ந்த விதத்தையும், பிறகு அவர் கள் லார்ட் பட்டம் பெற்றதையும், இளவரசன் மாளிகையில் வந்து தங்க நேரிட்ட விதத்தையும் விவரமாகக்கூறினாள். இதுமட்டுமா? தன் தங்கை கோமளவல்லியைப்பற்றியும், அவள் ஒழுக்கத்திலும் குணநிசயத்திலும் சிறந்த ஒருவனிடம் காதல்கொண்டிருப்பதையும் விவாமாய்க்கூறினாள். ஆனால் தான் சர்தார் சூரியநாயகம்பிரபு, குமாரவேல்பிரபு, கர்னல் மாரப்பன் முதலியவர்களிடமும் சந்தர்ப்பா சந்தர்ப்பங்களை யொட்டித் தன் கற்பை இழக்க நேர்ந்ததைமட்டும் அப்பிர புவினிடம் கூறவேயில்லை. இறுதியாகப் பல நிலைமைகளை யொட்டித் தன் மனத்திற்கும் பிடிக்காத நிலையில் தன்

மானத்தைக் கேவலம் கிழவன் சுகசிங்கம்பிரபுவுக்கும் விற்று விட்டதையும் சொல்லவில்லை. இவைகளையெல்லாம் அவள் சாமர்த்தியமாக மறைத்து விட்டாள். அவைகளையெல்லாம் கூற ஒப்புக்கொள்வதைவிட உயிர்விடுவதே மேலென அவள் நினைத்தாள். மேலும் மதுரைநாயகமும் அப்படிப்பட்ட விஷயத்தில் மதனவல்லியின்மீது எத்தகைய சந்தேகத்தையும் கொள்ளவில்லையாதலால் ஒப்புக்கொள்ளவேண்டிய அவசியமே அவளுக்கில்லாமற் போயிற்று. ஆகவே மதனவல்லியின் கற்புநிலை தவறிய விஷயத்தில் அவள் இளவரசருக்குக் காதலியான தொன்றுதான் குற்றமென நினைத்து அதற்காகவும் அனுதாபமடைந்தான். ஏனெனின், அவள் கூறிய முறையிலிருந்து உண்மையிலேயே அவள் தன் தலைவிதியின் படியே நடக்கவேண்டியதாயிற்று என்று அவன் தெரிந்து கொண்டான். எப்படிப்பட்ட மனோ உறுதியுள்ள மாதர்களும் அத்தகைய சந்தர்ப்பங்களில் அவ்வாறுதான் நடந்து கொள்ள முடிந்திருக்கும் என்றும் அவன் கருதினான்.

தன் விவரத்தையெல்லாம் கூறி முடித்த பின்னர் மதனவல்லி, மதுரைநாயகத்தைக்கண்டு, "என்ன? இப்போது நீ என்னைக் கேவலமாகக் கருதவும், வெறுக்கவும் மாட்டாயா?" என்று கேட்டாள்.

மதுரை:—இல்லை, நான் வெறுக்கவில்லை. உன் சகோதரன் என்னும் முறையில் உன்னிடம் அனுதாபமே காட்டுகின்றேன். நானே உன் பெற்றோர்களாய் இருந்து, உன்விஷயத்தில் அதிகாரத்துடன் பேசும் உரிமை எனக்கிருந்தால் உன்னை மன்னித்து விட்டதாகக் கூறிவிடுவேன்.

மதன:—(அவனைத் தழுவிக்கொண்டு) ஓ! நீ மிகவும் தாராள நோக்க முடையவன். நான் வெறுக்கத்தக்கவள்

என்று கருதிவிடவேண்டாம்; என் கணவனும் வெறுக் கத்தக்கவரல்ல. ஏனெனின் சிற்சில சமயங்களில் நாங்களிருவரும் தனியாக இருந்து பரஸ்பரம் ஒருவர் உணர்ச்சியை ஒருவர் அறிவித்து இத்தகைய நிலைமை ஏற்பட்டதற்காக மனமார வருந்தியதுண்டு. நானே அல்லது அவரோ இப்போது திருப்தியான வாழ்க் கையை நடத்தவில்லை. அரசமாளிகையில் ஒருவருஷம் வாழ்ந்தபிறகும் எங்களுக்கு அவ்வாழ்க்கையில் அரு வருப்புத்தோன்றி யிருக்கிறதேயொழிய அதிலொன் றும் இன்பமோ ஆனந்தமோ தோன்றவில்லை.

மதுரை:—அப்படியானல் நீங்கள் இம்மாளிகையைவிட்டு வெளியேறி விடுவீர்கள் போலும்! இந்தப் பாழும் கேவல வாழ்க்கையினின்றும் விலகிச்செல்ல நீங்கள் தயாராக இருக்கிறீர்களெனத் தெரிகிறது. பரஸ்பரம் நீயும் உனது கணவனும் சந்தோஷமாக வாழ்வதற் குரியகாலம் இன்னும் கடந்துவிடவில்லை. எப்படியாயி னும் அதைப்பற்றியெல்லாம்பேச இது சமயமல்ல. இப்போது உன்மனம் பற்பல குழப்பத்தில் மூழ்கி யிருக்கிறது, உன் நிலைமையைப்பற்றிய துயரம் ஒரு புறம்; நான் வெளியிட்ட விஷயத்தாலுண்டான பிரமை மறுபுறம். இவ்வாறாக நீ அதிக மனக்குழப்ப மடைந் திருக்கிறாய். நாம் இருவரும் நமது விஷயங்களைப்பற்றிச் சாவகாசமாகவும் நிதானமாகவும் பேசவேண்டும். நாம் நமது சகோதரியைப்போய்ப் பார்த்துவிட்டு அவளது பிறவிச்சம்பந்தமான மர்மங்களை வெளியிட்டு வரவேண் டும். மேலும் நான் அவளை மனமாரக்கண்டு மகிழ விரும்புகின்றேன். அவளுடைய குணாதிசயத்தைப் பற்றி நீ புகழ்ந்து கூறி யிருக்கிறாய் அல்லவா? ஆகவே

நான் அவளுடன் சிநேகம் செய்துகொள்ள விரும்பு கிறேன். நாம் எப்போது அங்கே போவோம்.

மதன:—நாளை காலையே புறப்படுவோம். நான் எனது பிர யாணவண்டியில் என் அந்தரங்க சேவகியுடன் நாளை காலை புறப்படுகிறேன். அச்சேவகிக்கு என் விஷயத் தைப்பற்றி யெல்லாம் தெரியும். அவள் வருவதால் யாதொரு பாதகமுமில்லை. நீ எங்களை எங்கே சந்திப் பாய்?

மதுரை:—நமது நகருக்கப்பால் ஒரு டோல்கேட் இருக்கிற தல்லவா? நீ அங்கு உன் குதிரையை மாற்றவேண்டி யிருக்கும். அந்த இடத்தில் நான் முன்னதாகவே காத்துக்கொண்டிருந்து உங்களுடன் சேர்ந்துகொள் கிறேன்.

மதன:—அப்படித்தான் செய்வோம். நான் நாளை காலை ஒன்பதுமணிக்கு இங்கிருந்து புறப்படுகிறேன். சுமார் பத்துமணிக்கு அந்த டோல்கேட் இடத்தில் நாம் சந் திப்போம்.

இவ்வாறு பேசிமுடிந்ததும் மதுரைநாயகம் பிரபு மதன வல்லியின் விடைபெற்று வெளியே போய்விட்டான். அவன் சென்றதும் மதனவல்லி ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கிவிட் டாள். அப்போது அவள் பல விஷயங்களைப்பற்றி யெல்லாம் மனதில் சிந்தித்தாள். மேலும் இனி எவ்வாறு நடந்துகொள் வது என்பதுபற்றியும் யோசித்து முடிப்பதற்குள் தன் அறையின் கதவு திறக்கப்பட்டு அறையில் சர்தார் சூரியநாய கம் புகுந்தான்.

நேயர்காள் மதனவல்லியைப்பற்றி மதுரைநாயகம் நினைத் ததேபோல் சிற்சில சமயங்களில் நிகழும் காரியங்களை எப்

படிப்பட்ட மனே உறுதியுடையவர்களும் தடுத்துக்கொள்ள முடிவதில்லே. சில காரியங்கள் நம்மையும் மீறியே நடந்து வருகின்றன. இதனுல்தான் நமது பெரியோர்கள் 'எல்லாம் நம்மையாளும் ஈசன் செயல்' என்றும் 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்றும் கூறியிருக்கின்றனர். ஆயினும் எல்லாம் அவன் செயல் எனக் கூறிக்கொண்டு மனம்போன போக்கெல்லாம் திரிந்து ஒழுக்கங்கெட்டுத் திரியலாகாது. பகுத்தறிவை உபயோகித்து பெரியோர்களால் விலக்கப்பட்ட காரியங்களில் ஈடுபடாமல் நற்குண நல்லொழுக்கத்துடன் வாழ்க்கையை நடத்தவே ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். மேலும் மதனவல்லி மதுரைநாயகத்தினிடம் தன் விஷயத்தைப்பற்றிச் சொல்லிக்கொண்டபோது அவள் மற்றும் சில பிரபுக்களுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள நேர்ந்ததைச் சொல்லாமல் மறைத்துவிட்டாள். ஒவ்வொருவரும் தினசரிக்குறிப்பு ஒன்றை வைத்துக்கொண்டு இறைவனுக்குப் பொதுவாக உண்மைக்குக் கட்டுப்பட்டு அன்றாடம் தாம் செய்யுங் காரியங்களே உண்மைக்கு மாறுபடாதபடி எழுதிவைப்பதென ஆரம்பித்தால் தீய காரியங்களில் ஈடுபடுவது நாளடைவில் குறைந்துவரும். உண்மையைக் கடைப்பிடிப்போர் எப்போதும் எத்தகைய கெட்ட பழக்க வழக்கங்களுக் குட்படமாட்டார்கள். நாம் வாழ்க்கையில் திடமான சில நல்ல கொள்கைகளேப் பின்பற்ற முயற்சி செய்யாமல் சமயாசந்தர்ப்பங்கள் எப்படி இழுத்துக்கொண்டு செல்கின்றனவோ அப்படியெல்லாம்போவது என்று இருப்பதனுல்தான் பெரும்பாலோர் பரிசுத்தமான வாழ்க்கையை நடத்த முடியாமல் இரகசியமாகவேனும் பல கெட்ட காரியங்களில் ஈடுபட்டுவிடுகின்றனர். பெரியோர்களெல்லாம் தம்முடைய நித்ய வாழ்க்கையில் இப்படிப்பட்ட நியதிகளேயெல்லாம் ஏற்படுத்திக்கொண்டு கட்டுப்பாடான வாழ்க்கையை நடத்தி

வந்ததால்தான் பெரியோர்களாக விளங்கமுடிந்தது. இப்போதும் நம் கண் எதிரே உலக மக்களிலேயே சிறந்தவராக விளங்கும் மகாத்மா காந்தியடிகள் உலகம்போற்றும் உத்தமராய் அமைந்ததற்கும் அவர் வாழ்க்கையில் உண்மை, அன்பு, அஹிம்சைபோன்ற அரிய கொள்கைகளை நடத்திக்காட்டி சந்தர்ப்பங்களுக் குட்பட்டுவிடாமல் அவற்றை எதிர்த்து நித்ய வாழ்க்கையைத் தாம் வகுத்துக்கொண்ட நியதியின்படி நடந்துவருவதேயாகும். ஆகவே நாமும் இத்தகைய உயரிய லட்சியங்களை வாழ்க்கையில் கடைப்பிடித்து மாக்களாக வாழாமல் மக்களாகவே வாழ முயற்சிப்போமாக.

159 - வது அத்தியாயம்

மதனவல்லியின் அறையில் சர்தார் சூரியநாயகம் புகுந்தானென்று கூறினோமல்லவா? அப்பிரபுவிடம் மதனவல்லிக்குப் பிரத்யேகமான அன்பும் ஆதரவும் இருந்தது. ஆகவே அத்தகைய சந்தர்ப்பத்தில் அவன் வந்ததும் அவளுக்குத் திருப்தியாகவே இருந்தது. பற்பல துக்கமயமான விஷயங்களையெல்லாம் சிந்தித்துக்கொண் டிருக்கும் போது மனமார்ந்த தோழன் வந்துவிட்டால் அச்சிந்தனை யெல்லாம் மாயமாய் மறைந்துவிடுமல்லவா?

சர்தார்:—எனதன்புள்ள மதனவல்லி! நான் உன்னைப் பார்த்து அதிக நாட்களாய்விட்டன. அப்போது பார்த்தது போலவே இப்போதும் அழகுள்ளவளாயும் வசீகரமுள்ளவளாயும் இருக்கிறாய். ஆனால் நீ ஏதோ சஞ்சலப் பட்டுக்கொண்டிருந்து திடீரென்று என்னைக் கண்டதால் புன்சிரிப்பு கொள்பவள்போலக் காணப்படுகிறது.

என்று கூறிக்கொண்டே அவன் அவளை இறுகத்தழுவி முத்தமிட்டான்.

மதன:—இப்போது நீ அளித்த முத்தமானது வெறும் சினேகத்தால் மட்டும் அளிக்கப்பட்டதென்பதை இனி நீ உணரவேண்டும்.

சர்தார்:—ஏன் சினேகத்தால் மட்டும் என்று கூறினாய்? காதலால் அளிக்கப்பட்ட முத்தமாய் இருக்கலாகாதா?

மதன:—இல்லை. நான் இப்போது பல விஷயங்களைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தேன். இனி என் வாழ்க்கையில் பரிசுத்த மாறுதலை உண்டாக்கிவிடுவதெனத் தீர்மானித்துவிட்டேன்.

சர்தார்:—ஓ! உன் ஆழ்ந்தசிந்தனை உன்னைத் திருப்பிவிட்டது போலும்! எந்த விஷயத்தில் மாறுதல் உண்டாக்கப் போகிறாய்?

மதன:—என் நடத்தையில் மாறுதலை உண்டாக்கவேண்டும் அன்புள்ள சர்தார்! நீயே யோசித்துப்பார். இப்போது நான் மாளிகையில் இன்பமாகவே காலங் கழிக்கிறேனென்றாலும் என் வாழ்க்கை அறிஞர்களால் எள்ளி நகையாடத்தக்கதாகவும், மனச்சாட்சிக்கு விரோதமானதாகவும் இல்லையா?

சர்தார்:—ஆ! உன் சூரியப் பிரகாசம்போன்ற முகத்தை மறந்துவிடும்படியா எனக்குக் கூறுகிறாய்? நீ இளவரசருடன் சம்பந்தம் வைத்துக்கொண்டிருப்பதை உலகம் ஒரு குற்றமாகக் கருதவில்லை. மற்ற இரகசியங்களை யாரும் அறியார். ஆகவே இப்போது உன் வாழ்க்கையால் என்னசங்கடம் ஏற்பட்டுவிட்டது?

மதன:—அப்படிச் சொல்லாதே. நான் பரிசுத்தமான, கற்புநிலை தவறாத வாழ்க்கையை நடத்திவந்தால் உண்மையி

லேயே அது எவ்வளவோ மடங்கு அதிகமான இன்பம் தருமல்லவா?

சர்தார்:—ஆம்; வாஸ்தவமே. நீ கூறுவதும் உண்மைதான். ஆனால் இவ்வளவு அழகுடையவளாய் இருந்ததால்தான் இத்தகைய அபாரமான பதவியை அடையமுடிந்தது. திடீரென்று அவற்றையெல்லாம் உதறித் தள்ளிவிட்டுப் போவதும் சிரமமே. எனினும் பரிசுத்த வாழ்க்கையை மேற்கொள்வது உத்தமமே. நான் என்னைப்பற்றிய ஒரு விஷயத்தை உன்னிடம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மதன:—மிகவும் சந்தோஷம். உன் இரகசியங்களையும் என்னிடம் நீ சொல்லிக்கொள்ள வேண்டுமென்பதே என் அபிப்பிராயம்.

சர்தார்:—ஆனால் நீ என் எண்ணத்தைக்கண்டு சிரித்துப் பரிகசித்தால் நான் என்செய்வது என்றுதான் அஞ்சுகிறேன்.

மதன:—இல்லை. நான் ஒருகாலும் பரிகசிக்கமாட்டேன். ஏனெனின் நீ என்ன சொல்லப்போகிறாய் என்பதை ஒருவாறு யூகித்துக்கொள்ள என்னால் முடியும்.

சர்தார்:—அப்படியானால் அது என்ன என்பதை யூகித்துச் சொல் பார்ப்போம். என் மனதிலுள்ள உணர்ச்சியை நீயே சொல்லி விடுவதால் நானே சொல்லிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இல்லாமற் போய்விடும்.

மதன—அப்படியானால் உன் உணர்ச்சியைச்சொல்ல நான் முயற்சிக்கிறேன். நீ ஒருத்தியைக் காதலிக்கின்றாய்.

சர்தார்:—ஆம்; உன்னைத்தானே காதலிக்கின்றேன். அது உனக்கு நீண்டநாளாகத்தெரிந்த விஷயமே. இப்போது புதிதாகச் சொல்வானேன்?

மதன:—இல்லை. இப்போது நான் அதைச் சொல்லவில்லை. இப்போது நீயும் என்னைக் காதலிக்கவில்லை; நானும் உன்னைக் காதலிக்கவில்லை. நாம் பரஸ்பரம் ஒருவரை யொருவர் நேசிக்கின்றோம். நம்மிடையே காமம் கொழுந்துவிட் டெரிந்தபடியால் அதைத் தீர்த்துக் கொள்வதற்காக நாம் இருவரும் பரஸ்பரம் இன்பம் அனுபவித்தோம், அவ்வளவே. நான் இப்போது சொன்னதென்னவென்றால் நீ அந்த விசுவநாதனுடைய சகோதரி அமிர்தாம்பாளை நேசிக்கின்றாய் என்பதே. நீ அதைப்பற்றி என்னிடம் பலமுறை பிரஸ்தாபித்திருக் கிறாயல்லவா!

சர்தார்:—சரி. அவளைப்பற்றி நான் உன்னிடம் முன்னமே சொன்னதாகவே வைத்துக்கொள்வோம். இப்போதும் அதேவிஷயமாக நாம் இருவரும் சினேகிதர்கள் என் னும் முறையில் உன்னுடன் யோசிப்பதற்கே வந்தேன். ஆகவே நாம் இருவரும் அதைப்பற்றி ஒளி மறைவின் றிப் பேசுவோம்.

மதன:—நீ இவ்வாறு என்னிடம் பூரண நம்பிக்கை வைத்துப் பேச முன்வந்ததற்காக நான் மிகவும் சந்தோஷப்படு கிறேன். நான் உன் க்ஷேமத்தை மனமாரக் கோருபவ ளாதலால் கட்டாயம் நல்ல யோசனையையே உனக்குக் கூறுவேன் என்பது திண்ணம்.

சர்தார்:—சரி, அப்படியானல் நான் இப்போது என் இரகசி யங்களையெல்லாம் உன்னிடம் வெளியிடவேண்டியது அவசியமென நினைக்கிறேன். முன்பு ஒருமுறை நாம் அமிர்தாம்பாளைப்பற்றிப் பேசிக்கொண் டிருந்தபோது என் அபிப்பிராயப்படி நான் நடக்கலாமென நீ கூறி ளுய். மதனவல்லி! உண்மையில் நான் இப்போது

நடத்திவரும் வாழ்க்கையில் எனக்கு வெறுப்பு அதிகரித்திருக்கிறது. உன்னைப்போலவே நானும் எனது வாழ்க்கையில் புதிய மாறுதலை உண்டாக்கிக்கொள்ள விரும்புகிறேன். நான் மிதமிஞ்சிய குடிக்கு ஆளாகிவிட்டதால் என்தேகம் மெலிந்துவிட்டது.

மதன:—நான் முன்பு பார்த்தபோது இருந்ததைவிட இப்போது சிறிது சௌகரியமுள்ளவனாகவே நீ காணப்படுகிறாய். ஏதோ முகம் வெளுத்திருக்கிறதுபோல் காணப்பட்டாலும் அசௌக்கிய முடையவனாகத் தோன்றவில்லை.

சர்தார்:—நீ இவ்வாறு கூறியதைக்கேட்க நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். என் தேகசௌக்கிய விஷயத்தில் உன் அபிப்பிராயம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ளவே நான் ஆவலுடையவனாக இருந்தேன். உண்மையிலேயே இப்போது நான் சொற்பகாலமாகச் சௌகரியமாகவே இருக்கிறேன். சிலதினங்களுக்குமுன் என் மனதிலேயே ஒரு பயம் தோன்றியது. அதாவது நான் பலஹீன மடைந்துவிட்டேனோ என்பதே. ஏன் அப்படித்தோன்றியதென்றால் காலையில் படுக்கையினின்றும் எழுந்தபோது வயிற்றில் ஒருவித எரிச்சல் காணப்பட்டது. கை நடுக்கமெடுத்தது. என்னால் முகக்ஷவரமும் செய்துகொள்ள முடியவில்லை. ஆகவே நான் ஒரு கோப்பை பிராந்தி அருந்தவேண்டியதாயிற்று. பிறகு ஒரு கோப்பை கொக்கோவும் அருந்தினேன். அதன்பின்னர் சோடாபுட்டி ஒன்றையும் குடித்தேன். இவைகளெல்லாம் அருந்தாமுன் அன்று வேலையில் இறங்க என்னால் முடியவில்லை. இதனால் மரணம் சமீபித்துவிட்டதோ என்றும் அஞ்சினேன்.

மதன:—இவ்வளவு அச்சத்தைத் தரக்கூடிய ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசவேண்டாம். மரணம்! நான் எப்போதும் அதைப்பற்றி நினைத்ததுமில்லை.

சர்தார்:—வாஸ்தவம்தான். மரணத்தைப்பற்றிப் பேசுவதற்கு இது இடமல்ல. இங்கே காதலைப்பற்றிய பேச்சுத்தான் பேசவேண்டும். ஆகவே நான் என் கதையைத் தொடர்ந்துகூற ஆரம்பிக்கிறேன். நான் என் நிலைமையைப்பற்றித் தெரிவித்துக்கொள்ள என் அன்புள்ள நண்பராகிய ஒரு டாக்டரிடம் சென்றேன். அவர் என்னைப்பார்த்து, "நாம் நடத்தும் வாழ்க்கை சரியானதல்ல. நமது வாழ்க்கை முறையால் நாமே நமது மரணத்தைத் தேடிக்கொள்கிறோம். வொயின், கொக்கோ முதலிய பானங்களை அருந்த நமக்கென்ன உரிமை இருக்கிறது. நாம் நமது வாழ்க்கையில் பரிசுத்த மாறுதலை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்" என்று கூறினார். அவர் சொன்னதெல்லாம் சரியாகவே தோன்றியதால் நானும் அதை ஒப்புக்கொள்ள நேரிட்டது. அந்த டாக்டரைச் சந்திப்பதற்கு முன்னரே நானும் அதே அபிப்பிராயத்தைத்தான் கொண்டிருந்தேன். என் அபிப்பிராயப்படியே அந்த டாக்டரும் நான் நல்ல தேக திடமுடையவனாக இருந்தும் விபசாரம் செய்வதாலும், மதுபானம் அருந்துவதாலும் மற்றும் ஒழுங்கான வாழ்க்கையை நடத்தாததாலுமே இப்படியெல்லாம் கஷ்டப்பட நேர்ந்ததாகவும், ஆகவே அதையெல்லாம் விட்டுவிட்டு காலை மாலை நேரங்களில் நல்ல காற்றில் உலாவி, எளிய ஆகாரங்களை உட்கொண்டு காலாகாலத்தில் படுத்துத்தூங்கி விபசாரம் முதலியவற்றைவிட்டுத் தொலைத்தால் எவ்வித மருந்துகளுமின்றியே சௌக்கியமாக சுகா

தாரத்துடன் வாழலாமெனக் கூறினர். மேலும் மற்றும் தன்னைவிட அதிக அனுபவசாலியான மற்றொரு டாக்டரிடமும்போய் யோசனை செய்யும்படி சொன்னர். அந்த டாக்டரும் இவ்வாறே யோசனை கூறினர்.

மதன:—அப்படியானல் இப்போது நீ அந்த டாக்டர்களுடைய •உபதேசத்தையே பின்பற்றி உன் வாழ்க்கையை நடத்துகிறுய்போலும்!

சர்தார்:—ஆம்; கூடியவரையில் அப்படித்தான் நடக்கிறேன். நான் உடனே சமுத்திரக்கரையோரம் பரிசுத்த காற்றில் உலாவச்சென்றேன். அந்த இடத்தில் இருந்தபடியே இனி மதுபானம் செய்வதில்லையென உறுதி செய்துகொண்டேன். முதலில் மதுபானம் விடுவது எனக்குச் சிரமமாகத் தோன்றினலும் பிறகு அது சாத்தியமாய்விட்டது. தினசரிசமுத்திரஜலத்தில் குளித்து நல்ல தேகாப்பியாசங்களைச் செய்கிறேன். சரியாக இரவு பத்துமணிக்கெல்லாம் படுக்கைக்குச் சென்று விடுகிறேன். ஆனல் கண்டபோதெல்லாம் மதுபானம் செய்வதை நிறுத்திவிட்டு ஆகாரம் முடிந்ததும் இரண்டு கோப்பை வொயின் அருந்துகிறேன். இதனலெல்லாம் என் தேகநிலை சுகப்பட்டுவருகிறது. ஆகாரத்துக்கு முன்னரோ அல்லது இதர வேளைகளிலோ மதுபானம் அருந்தவேண்டு மென்னும் எண்ணமே உண்டாவதில்லை. இப்போதும் நீ மதுபானம் அருந்தி அதனல் உன்வாய் ஈரமாய் இருக்குமாயின் நான் உனக்கு முத்தமிடமாட்டேன். ஆனல் இப்போது அவ்வாறு மதுபானம் செய்யாதவளாகவே இருப்பதால் இதோ முத்தம் தருகிறேன். (முத்தமும் அளிக்கிருன்).

மதன்:—இவ்வாறு மற்றொருமாதுக்கு முத்தமளிப்பதால் நீ உன் காதலியாகிய அமிர்தாம்பாளுக்குத் துரோகம் செய்தவனாகமாட்டாயா? நானும் என்னைச் சீர்திருத்திக் கொள்வதென்றே தீர்மானித்து விட்டிருக்கிறேன். நீ இப்போது கூறிய விவரத்தைப்பார்த்தால் நம்மைத் திருத்திக்கொள்வது எளிய காரியமென்றே தோன்றுகிறது. உன்னை மனமார நேசிக்கும்முறையில் நான் நீ சொன்னதைக்கேட்டு உண்மையிலேயே சந்தோஷப் படுகிறேன். நீ இறுதியாக இப்போது சொல்லப்போவ தென்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

சர்தார்:—இன்னும் நான் என்னசொல்வது? எனக்கொன்றும் புரியவில்லையே.

மதன்:—ஏன்? அமிர்தாம்பாளைப்பற்றி உன்முடிவான அபிப் பிராயமென்ன. நான் பிறருடைய உள்ளத்தில் என்ன என்ன இருக்கிறதென்பதை எளிதில் அறிந்துகொள்ளக் கூடியவள். நான் இப்போது உன்னைப்பற்றிச் சில விஷ யங்களைச் சொல்லட்டுமா?

சர்தார்:—ஆம்; தயவுசெய்து அவ்விஷயங்களைச் சொல் பார்ப் போம். இப்படிப்பட்ட விஷயங்களைப்பேசுவது எனக் குச் சந்தோஷமாகவே இருக்கிறது.

மதன்:—அப்படியானல் கூறுகிறேன்கேள். அமிர்தாம்பாளுக் குச் சில மாதங்களுக்கு முன் நேர்ந்த விசித்திரமான சம்பவங்களின்போது உனக்கு அவளிடம் ஒருவிதமான ஆலசை உண்டாய்விட்டது. ஆனல் சாதாரண ஒரு குமாஸ்தாவினுடைய சகோதரியிடம் உனக்கு அன்பு ஏற்பட்டிருக்கிறதென்பதை ஒப்புக்கொள்ள நீ ஆரம்பத் தில் சொற்பகாலம் துணியவில்லை. நீ உன் தாரான

நோக்கத்துடன் அவளுக்கும் அவளது சகோதரனுக்கு மாகச் சௌகரியமான இடத்தையும் இதரவசதிகளையும் செய்து கொடுத்தபோதும் விசேஷமாக அவர்கள் வீட்டுக்குச் செல்லவில்லை. அடிக்கடி உன்மனதில் தோன்றிய அமிர்தாம்பாளின் உருவத்தை மறக்கவே முயன்றாய். ஆனால் அவளிடம் உனக்கு உண்டான அன்பை மாற்றிக்கொள்ள உன்னால் முடியவில்லை. ஆகவே நீ தனியாக மாலைநேரங்களில் சமுத்திரக்கரைக்குப் போய் உலாவும்போது அமிர்தாம்பாளைப்பற்றியே சிந்திக்க ஆரம்பித்துவிட்டாய். ஏனெனின் அவள் உன்னை உண்மையாகக் காதலிப்பதால் அவளுடைய உண்மையானது உன்னை அவள்பக்கம் அதிவேகமாக இழுத்துச் சென்றது. அவ்வேகத்தை எதிர்க்க உன்னால் முடியவில்லை. எனவே நீ தனியாக இருக்கும்போதெல்லாம் அவளுடைய அழகு, அழகுக்கேற்ற நற்குணம், கபடமற்ற தன்மை முதலியவைகளைப்பற்றிச் சிந்தித்து மகிழ்ச்சி யடையலானாய். உன் கவனத்துக்குப் பாத்திரமான அவளைப்பற்றி அலட்சியமாய் இருந்துவிட்டதற்காக உன்னையே நீ ஏசிக்கொண்டாய். இறுதியாக நீ இன்பமாக வாழவேண்டுமாயின் அவள் உனது காதலியாக இருக்கவேண்டுமென்பதை உணர்ந்தாய். எனினும் பெரிய பிரபுவின் வம்சத்தைச்சேர்ந்த நீ கேவலம் ஒரு குமாஸ்தாவின் சகோதரியை மணப்பதா என்னும் அகங்காரம் மெல்ல மெல்ல தலைகாட்டுகிறது. எனதன்புள்ள நேசனே! நான் சொல்வதைக்கேள். அந்த வீண் அகங்காரமும் டம்பமும் வேண்டாம். நீ நற்குண நல்லொழுக்கங்களில் சிறந்த அமிர்தாம்பாளை விவாகம் செய்துகொள்வதால் மட்டுமே இனி எதிர்காலத்தில் நீ சுகமடைவாய்.

நேயர்காள்! மதனவல்லி எவ்வளவுதான் கெட்டுப்போயிருந்தாலும் அவளது உள்ளத்தின் அடியிலேனும் நல்லெண்ணம், பச்சாத்தாபம் முதலிய சிறந்த குணங்கள் பொதிந்து கிடப்பதைப் பாருங்கள். உண்மையிலேயே உலகில் மக்களாய்ப் பிறந்த அனைவரும் இயற்கையில் மிக நல்லவர்களே. சகவாசத்தாலும் சந்தர்ப்பத்தாலும் பலரும் பற்பலவிதமாக நடக்க நேரிடுகிறது. ஆகலின் ஒவ்வொருவரும் நல்ல சந்தர்ப்பத்திலும் சகவாசத்துடனும் வாழவே முயலவேண்டும். மேலும் மதனவல்லி கூறியதேபோல் பிரபுக்கள் வம்சத்தில் பிறந்ததற்காக வீண் அகங்காரம் கொள்வதில் பிரயோசனமில்லை. பணத்தாலும் குலத்தாலும் கல்வியாலும் எவருக்கும் மதிப்பு ஏற்படாது. அவற்றிற்குத் தக்க ஒழுக்கமும் நன்னடத்தையும் இன்றி யமையாததாகும். பிரபுக்கள் குலத்துதித்த குணநலமற்ற பெண்களைவிட எழைகளான நற்குண நல்லொழுக்கங்களுடன் கூடிய மாதர்களே இல்லறவாழ்க்கையில் இன்பம் தருபவர்களாவர்.

மதனவல்லி இவ்வாறு நல்லெண்ணத்துடன் பேசியதைக்கண்ட சர்தார் சூரியநாயகம் அதிக ஆச்சர்யமும் சந்தோஷமும் அடைந்தான். அவள் உண்மையிலேயே தன் க்ஷேமத்தை விரும்பும் முறையில் யோசனை கூறுவதாலும், மிக்க குணவதியான ஒரு மாதுக்காகப் பரிந்து பேசுவதாலும் மதனவல்லி என்றுமில்லாத வகையில் அவ்வளவு அழகுடனும் நற்குணத்துடனும் இருப்பதாக சர்தாருக்குத் தோன்றியது. ஆனல் இதற்குமுன் அவன் மதனவல்லியின் அழகைக் காமப்பார்வையுடன் பார்ப்பது வழக்கம். இப்போதோ அத்தகைய எண்ணத்துடன் இல்லாமல் வெறும் சினேகமுறையிலும், தன் க்ஷேமத்தை விரும்புகிற உத்தமி என்னும் முறையிலும், அவளை உற்றுநோக்கினுன்.

சர்தார்:—மதனவல்லி! உன் குணத்தில் மிகச் சிறந்த ஆம்சமிருக்கிறது. நீ உலகிலுள்ள இதர பெண்களைப் போலவோ அல்லது அரசமாளிகையிலுள்ள ரூபவதிகளைப்போலவோ மட்டுமில்லை. உன்னிடம் பச்சாத்தாபத்துடன் கூடிய பரிசுத்தமான ஹிருதயமும் இருக்கின்றது. மிகச்சிறந்த குணநிசயங்களெல்லாம் அந்த ஹிருதயத்தில் பதிந்து கிடக்கின்றனவென்றே பகிரங்கமாகக் கூறுவேன். ஆனால் சமயாசந்தர்ப்பங்களை யொட்டித்தான் நீ இவ்வளவுதூரம் கெட்டுப்போனாய். நான் இப்போது உண்மையிலே உன்னை நேசிக்கிறேன். ஆனால் முன்பு நேசித்தமுறையில் அல்ல. இப்போது நான் உன் குணநிசயத்தைக் கண்டு ஆச்சரியமும் பெருமையும் அடைகின்றேன்.

இவ்வாறு கூறிக்கொண்டே அவன் அவளது கரத்தைப் பிடித்து அதை முத்தமிடாமல் அன்புமுறையில் குலுக்கி விட்டு விட்டான்.

மதன:—நான் உன் மனதிலுள்ள அபிப்பிராயங்களையெல்லாம் தெளிவுற விளக்கிவிட்டேனல்லவா?

சர்:—ஆம்;விவரமாகக் கூறிவிட்டாய்.நானே என் உள்ளத்தை இவ்வளவு நன்றாக அளந்துகொண்டிருக்க முடியாது. நீ நன்றாகப் பரிசீலனைசெய்து என் உள்ளத்தில் ஆழ்ந்து கிடந்த எண்ணங்களையெல்லாம் சமத்காரமாக வெளிப்படுத்திவிட்டாய். நாம் இருவரும் இப்படி ஒரு நல்ல விஷயத்தில் மனதைச்செலுத்திப் பேசுவதென்பது ஆச்சர்யமாக இல்லையா? மதனவல்லியும், சர்தார் சூரியநாயகமும் சேர்ந்து இவ்வாறு அனுதாபத்துடன் நல்ல விஷயத்தைப்பற்றிப் பேசுவார்களென யாரேனும் எதிர்பார்ப்பார்களா? இருந்தாலும் இப்போது இப்படி இருக்க

வேண்டுமென்பது இறைவன் திருவருள்போலும்! கால சக்கரம் மிக வேகமாக சுழன்றுவருகிறது. நாம் எதிர் பாராத நூதன சம்பவங்களெல்லாம் இறைவன் கட்டளைப்படி நிகழ்ந்து நமக்கு ஆச்சர்யத்தை உண்டாக்கு கின்றன. டாம்பீகத்திலும் விபசாரத்திலும் குடியிலும் கழிக்கப்பட்ட நமது வாழ்க்கையில் ஒரு நல்ல புதிய மாறுதல் ஏற்படவேண்டுமென்பது இவ்வுலகத்தையே தன் இஷ்டப்படி ஆட்டிவைக்கும் எல்லாம்வல்ல எம் பெருமானது திருவுளம்போலும்!

மதன:—ஆம்; நிச்சயமாகவே என் சம்பந்தப்பட்டவரையில் என் வாழ்க்கையில் மாறுதல் ஏற்பட்டுவிட்டது. இனி நான் என் உறுதியினின்றும் தவறமாட்டேன். நீ இப்படியே உறுதியுடன் இருப்பாயா? அல்லது இரத்தின புரியின் டாம்பீக வாழ்க்கை இன்னும் உன்னைத் தன் பக்கம் இழுத்துவிடுமோ என்று அஞ்சுகிறேன்.

சர்தார்:—இல்லை. இனி நான் திரும்பவே மாட்டேன். ஒரு மனிதன் தன் சௌக்கியத்தையும் கவனியாமல் கண்டபடி வாழ்க்கையை நடத்துவதென்றால் அவன் பைத்தியக்காரனாகத்தான் இருக்கவேண்டும். இல்லவே இல்லை. எனக்கு என் சுகாதாரவிஷயத்தில் அதிக கவலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நான் இனி பழைய வாழ்க்கைக்குத் திரும்பமாட்டேன். மதனவல்லி! நான் சத்தியமாகச் சொல்கிறேன். நான் இப்போது ஒரு மாறுபட்ட மனிதனாகவே ஆகிவிட்டேன். உன்னை எனது சினேகிதியாகவே கருதுகிறேன். நான் உன்னை மனமார விரும்புகிறேன். ஆகவே என் மனநிலையைத் ததை உன்னிடம் சொல்லிக்கொள்ளவே இங்கு வந்தேன். ஆனால் சங்கோசத்தால் ஒன்றும் சொல்ல

முடியவில்லை. நீயே தாராள நோக்கத்துடன் என்னைப் பரிகாசம் செய்யாமல் என் நிலைமையை உணர்ந்து நான் கடைத்தேறுவதற் கேற்றமுறையில் நல்லுபதேசம் செய்தாய். இதற்காக நான் உனக்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். நாம் இருவரும் எப் போதும் நல்ல சினேகிதர்களாக இருக்கலாமல்லவா?

மதன:—ஆம்; கட்டாயம் சினேகிதர்களாக இருப்போம். அமிர்தாம்பாளுடைய நிலைமை என்னவது என்பதுபற் றிச் சிறிதுசொல் பார்ப்போம்.

சர்தார்:—இப்போது நான் உன்னைவிட்டுப் பிரிந்ததும் நேராக அவளுடைய வாசஸ்தலத்துக்குத்தான் செல்லப்போகி றேன். அங்குச்சென்று நான் அவளை மணம்புரிய விரும்புவதாகச் சொல்கிறேன்.

மதன:—இப்படிச் செய்வதென்று தீர்மானித்து விட்டாயா?

சர்தார்:—நான் உறுதியாகத் தீர்மானித்து விட்டேன். என் உள்ளத்தில் நான் இவ்வாறு கருதவில்லையென்றே வைத் துக்கொண்டாலும் அம்மாதுக்காக நீ பரிந்து பேசிய தால் என் ஹிருதயத்தில் ஒருவித நல்லுணர்ச்சி ஏற்பட் டிருக்கிறது.

மதன:—அப்படியானால் நீ உடனே புறப்படு. நீ ஒரு நல்ல விஷயத்தைச்செய்ய முன் வந்திருப்பதால் உன்னை இப் போது இங்கே அதிகநேரம் நிறுத்திக்கொண்டிருக்க லாகாது. அப்படி நிறுத்தினால் எனக்கே பாவம். அமிர்தாம்பாளை நான் பார்த்தறியேனென்றாலும் நீ அவ ளைப்பற்றிச் சொன்ன விஷயங்களிலிருந்து அவள் உன்னை மனமார நேசிக்கிறாள் என்றே நம்பவேண்டி யிருக்கிறது. அவள் கபடமற்ற மனத்தினளாய்ப் பல கஷ்டங்களுக் காளானபோதெல்லாம் நீயே முன்

னிருந்து அவளுக்குத்தக்க உதவி செய்திருக்கிறாய். அவள் தீப்பற்றிய உன் வீட்டில் அகப்பட்டுக்கொண்ட போதும் நீயே அவளை மீட்டதாகவும் என்னிடம் சொல்லி யிருக்கிறாயல்லவா? ஆதலால் நீ உடனேபோ. உன்னை நிறுத்த எனக்கு இஷ்டமில்லை.

உடனே "அப்படியானால் நான் போய்வருகிறேன்" என்று கூறிக்கொண்டே சர்தார் சூரியநாயகம்பிரபு மதன வல்லியின் கையைப்பிடித்து அன்புடன் அழுத்திவிட்டுச் சென்றான். மதனவல்லியும், "போய்வா. எல்லா சந்தோஷ மும் உனக்கு உண்டாகட்டும்" என்று கூறி விடைகொடுத் தனுப்பினாள். அவர்கள் இருவரும் பிரியும்போது கைகுலுக்கி னார்களேயொழிய ஒருவரையொருவர் தழுவிக்கொள்ளவில்லை. அவர்களிருவருக்குமே அந்த நல்லுணர்ச்சி ஏற்படாமலிருந் திருக்குமாயின் அவர்கள் பலவித சரசசல்லாபங்களைச் செய்துவிட்டே பிரிந்திருப்பார்கள். எப்படிப்பட்ட கொடி யவனுக்கும்கூட எதிர்பாராதவகையில் திடீரென்று நற்புத்தி வந்துவிடுகிறது. நீண்டகாலமாகப் பெருங்குடியனாக இருக் கும் ஒருவன், எத்தனைபேர் எவ்வளவுமுறை உபதேசித் தாலும் குடியை விடாதவன், எதிர்பாராதவகையில் திடீ ரென்று ஏதோ காரணங்கொண்டு அக்கடையின் பக்கமும் திரும்பிப்பாராதவனாகி விடுகின்றான். நமக்கும் தெரியாத ஒரு தெய்விகசக்தி உலகை ஆட்டிவருவதால்தான் இப்படிப் பட்ட காரியங்கள் நிகழ்கின்றன.

மதனவல்லி மதுரைநாயகம் பிரபுவுடன் பேசியதனா லேயே நல்லெண்ணத்தை யடைந்தாள். உடனே சர்தார் சூரியநாயகம் வந்ததும் அவனுடைய பேச்சுகளிலிருந்தும், அந்த நல்லெண்ணம் உறுதிப்பட்டது. அவள் இயற்கை யாகவே நல்லவளானபடியால் இச்சம்பவங்களெல்லாம் அவ

ளது உள்ளத்தில் நல்ல மாறுதலை உண்டாக்கின. அவளுக்கு இயற்கையாகவேயிருந்த நல்ல குணங்களெல்லாம் மறைந்து கிடந்தனவேயன்றி அடியோடு ஒழிந்துவிட்டிருக்கவில்லை. சர்தார் சூரியநாயகத்துக்குத் தான் கூறிய புத்திமதி சரியானதேயென்றும் அவள் கருதினுள். ஆகவே அவளுக்குப் பலவிதத்திலும் சந்தோஷம் ஏற்பட்டது.

ஆகவே அவள் நிம்மதியாக எங்கேனும் தனியேயிருந்து நல்ல விஷயங்களைப் பற்றியே சிந்திக்க எண்ணி அவ்வறையை விட்டுக் கீழே இறங்கித் தன் மாளிகைக்கடுத்த நந்தவனத்தில்சென்று அங்கே வேலியாகப் போடப்பட்டிருந்த இரும்புத் தண்டவாளங்களின்மீது சாய்ந்தவண்ணம் அங்குள்ள இனிய அழகிய புஷ்பங்களைப் பார்த்துக்கொண்டே கூரிய பார்வையுடன் பற்பல விஷயங்களைப்பற்றிச் சிந்திக்கலானுள். அவள் முகத்தில் கவலைக்குறிதான் தோன்றியதேயொழிய துக்கக்குறி காணப்படவில்லை. புஷ்பங்களின் அழகைக்கண்ட மாத்திரத்தில், "ஆ! என்ன அழகு, அப்புஷ்பங்கள் அவ்வளவு அழகாய் இருப்பதனுல்தானே பார்ப்பதற்கு மனோரம்மியமாக இருக்கிறது. அந்த அழகுதானே மன இன்பத்தைத் தருகிறது. ஆனுல் அம்மலர்களின் இதழ்களில் இனிய தேன் உண்டாகாமல் விஷம் உண்டாகுமாயின் அம்மலர்களின் அழகு உலகத்திற்குப் பயனில்லாமற் போவதுடன் துயரத்தையும் தருகின்றதல்லவா? அதுபோல நானும் மிகவும் அழகாகத்தான் இருக்கின்றேன். ஆனுல் என் அழகு என் மனத்துக்கு இனிமையைத் தரவில்லையே. இவ்வழகு என் வாழ்க்கையில் துயரத்தையல்லவா விளைவித்துவிட்டது? இப்போதும் காலங் கடந்துவிடவில்லை. என்னை நான் நல் வழியில் திருத்திக்கொள்ளக்கூடிய சாவகாசமிருக்கின்றது என்று நினைத்தாள்.

பிறகு சற்றுநேரம் மௌனமாக எதையும் நினையாமல் நிர்மலமான மனத்துடன் இருந்தாள். பிறகு திடீரென்று அவளது தேகம் பச்சாதாபத்தால் நடுங்கியது. காரணம் யாதெனின், அவள் இரத்தினபுரிக்கு வந்ததுமுதல் அவள் அழகானது அவளை எவ்வளவுதூரம் கட்டுக்கடங்காத கெட்ட வழிகளிலெல்லாம் இழுத்துச் சென்றுவிட்டது என்பதுபற்றி நினைத்ததேயாகும். அப்போதுதான் அவளுடைய அழகிய முகத்தில் கவலைமாத்திரமன்றி துக்கக்குறியும் காணப்பட்டது. இரண்டொரு கண்ணீர்த்துளிகள் அவளது கண்களினின்றும் தூயமுத்துகள்போல் வெளியாகிக் கீழேவிழுந்தன. அச்சமயத்தில் யாரோ ஒருவர் தன்மீது கைவைத்ததுபோல் தோன்றியதால் திடீரென்று திடுக்கிட்டுப்பார்த்தாள். ஆகவே அவள் பின்பக்கம் திரும்பிப்பார்த்ததில் தன் கணவன் செல்லப்பப்பிரபு நின்றுகொண்டிருந்ததைக் கண்டாள்.

செல்லப்பப்பிரபு, "அன்புள்ள மதனவல்லி! என்ன கண்ணீர்விடுகின்றாய்? இவ்வளவு அழகான ஒரு நந்தவனத்தில் சௌக்கியமாகவும் சுகமாகவும் இருந்துகொண்டு நீ கண்ணீர் விடவேண்டியதன் அவசியமென்ன? என்று கேட்டான். அதற்கு அந்த ரூபவதியான மதனவல்லி, "நாதா! என் மனதில் ஒருவிதமான சிறந்த மாறுதல் தோன்றியிருக்கிறது. ஆனால் அவைகளில் ஒன்றையும் இப்போது உன்னிடம் சொல்லமுடியாது. நீ அதைப்பற்றி ஒன்றும் கேட்கவும் கூடாது. நாளையதினம் நான் இரத்தினபுரியைவிட்டு வெளியே சென்று என் தங்கையுடன் இரண்டொருநாள் தங்குவதாக நிச்சயித்திருக்கிறேன். நான் திரும்பிவந்ததும் உனக்கு எல்லா விஷயங்களையும் விவரமாகச் சொல்கிறேன். அப்போது நாம் இருவரும் சில முக்கியமான விஷயங்களைப் பற்றி சம்பாஷிக்க வேண்டியிருக்கும்" என்று கூறிவிட்டு அவள் அவ்விடத்தைவிட்டுச் சென்றாள். செல்லப்பப்பிரபு

வும் இந்த ஆச்சர்யமான மாறுதல் யாதாயிருக்குமோ என்று சிந்தித்துக்கொண்டே அந்த நந்தவனத்தைவிட்டு மாளிகைக்குள் சென்றான்.

நேயர்காள்! மதனவல்லி தான் இழைத்துவிட்ட குற்றங்களுக்காக மனமாரத் தனியே இருந்து சிந்தித்ததனால்தான் தெளிவடைந்து ஒருவிதமான நல்ல முடிவுக்குவர நேர்ந்தது. இதனால்தான் நமது பெரியோர்கள் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்று கூறினார்கள். நாம் எப்படிப்பட்ட உயரிய ஞானத்தை யார்சொல்லக் கேட்டாலும், அப்படிக் கேட்பதால்மட்டும் பயன் விளைந்துவிடாது. தன்னந்தனியே இருந்து பகுத்தறிவைக்கொண்டு கேட்ட விஷயத்தைப்பற்றிச் சிந்தித்தல்வேண்டும். அப்படிச் சிந்திப்பதனால் மட்டுமே தெளிவை யடையமுடியும். யார் அதிகம் சிந்தனை செய்கிறார்களோ அவர்களுடைய வாழ்க்கைதான் பரிசுத்தமானதாயிருக்கும். இதனால் பிரார்த்தனையும் அவசியமாகின்றது. பிரார்த்தனையென்றால் இக்காலத்தில் பலர் கோயில் விக்கிரகங்களுக்குப் பணம் செலவு செய்துவிடுவதென்றும், அவ்வாறு செய்வதோடு வாழ்க்கையில் அவர்களுடைய கடமை முடிந்துவிட்டதென்றும் தவறுதலாகக் கருதுகின்றனர். பிரார்த்தனை என்பதற்கு உண்மைப்பொருள் குற்றங் குறைகளை மன்னித்து ரட்சிக்கும்படி இறைவனை வேண்டுவதுடன் இனி அத்தகைய குற்றங்குறைகளுக்கு ஆளாவதில்லையென்று இறைவன் சன்னிதானத்தில் சென்னியை சாய்த்து உறுதி கூறுவதேயாகும். இதற்காகத்தான் இரவில் படுக்கப்போகும் போது ஒவ்வொருவரும் அன்றுமுழுதும் தாங்கள் வாழ்க்கையில் தெரிந்தோ தெரியாமலோ இழைத்துவிட்ட குற்றங்கள் யாவை என்பதைப்பற்றிச் சிந்தித்து அதற்காக மன்னிக்கும்படி இறைவனைப் பிரார்த்திப்பதுடன் இனி அத்தகைய காரி

யங்களைச் செய்வதில்லை என்றும் உறுதிகூறவேண்டும். இதற்குத்தான் பாவமன்னிப்புக் கேட்டல் என்றுசொல்வர். இவ்வாறு செய்யாமல் ஏதோ சில மந்திரங்களை அல்லது பொருள் விளங்காத சில சொற்களை ஜபித்துவிடுவது பிரார்த்தனையாகாது. பிரார்த்தனையின் பலன் நம்முடைய மனநேர்மைக்கும் உறுதிக்கும் தக்கவாறுதான் இருக்கும். இப்படிப்பட்ட சிந்தனைகளையெல்லாம் செய்யாமல் கண்டதேகாட்சி கொண்டதேகோலமெனத் திரியவேண்டுமெனச் சொல்வது சமூகத்தில் அமைதியின்மையை உண்டாக்கச்செய்யும் முயற்சியேயாகும்.

இரத்தினபுரி இரகசியம் ஐந்தாம் பாகம்

சம்பூர்ணம்.

"ஆனந்தபோதினி" அச்சுக்கூடம், சென்னை.

இரத்தினபுரி இரகசியம்

ஆறும் பாகம்

18ƒ560

160 - வது அத்தியாயம்

சென்ற அத்தியாயத்தில் கூறியபடி அழகிற் சிறந்த மதனவல்லியும், அவள் மனதிற்கேற்ற கணவன் செல்லப்பப்பிரபுவும் இனிய நந்தவனத்தினின்றும் தங்கள் மாளிகைக்குச் சென்றபின்னர் இரத்தினபுரியில் என்ன நடந்தது என்பதைப்பற்றிப் பின்னர் கவனிப்போம். இரத்தினபுரி இரகசியத்தின் ஐந்தாம்பாகம் முடிந்து ஆறுவதுபாகம் ஆரம்பிக்கும் இவ்வத்தியாயத்தில் இரத்தினபுரிக்கடுத்த கந்தபுரியில் நடக்கும் விசேஷ திடுக்கிடக்கூடிய சம்பவங்களைக் கவனிப்போம். மதனவல்லியும் செல்லப்பப்பிரபுவும் இரத்தினபுரியில் தங்கள் மாளிகையைச்சேர்ந்த நந்தவனத்தில் சந்தித்த அதே தினத்தில் அதே நேரத்தில் கந்தபுரியில் மடத்தைச்சேர்ந்த மிக்க அழகிய தோட்டமொன்றில் அம்மடத்தின் குருவான சுகானந்தஸ்வாமி என்னும் அயோக்கியன் மேலும் கீழுமாக நடந்துகொண்டே மிக்க ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். என்ன அவ்வளவு ஆழ்ந்தசிந்தனை? ஒருமடத்தின் குருவாகையால் ஆன்மார்த்த சம்பந்தமான உயரிய சிந்தனைகள் எதையேனும் செய்துகொண்டிருந்தானென நினைக்கிறீர்களா? இல்லவே இல்லை. அவன் அப்படிப்பட்ட பாவச்செயலில் இறங்கும் வழக்கமேயில்லை. அவன் குருவின்வேடம் அணிந்திருந்

தாலும் ஸ்திரீலோலனுதலால் அவனுக்கு ஏற்பட்ட மனோ வஸ்தையைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தான். அந்த எண்ணம் ஈடேருதாகையால் சிற்சில சமயங்களில் அவன் அதை மறக்கவும் முயற்சித்ததுண்டு. ஆனல் அவன் சதா காலமும் அதைப்பற்றியே நினைத்து நினைத்து அந்த எண்ணத்துக்கு இரையாஞன். ஆகவே அதைப்பற்றி நினைக்காம லிருக்க அவனுல் முடியவில்லை. அவனுக்கு இவ்வளவு கவலையை உண்டாக்கியது யார் தெரியுமா? கற்பிற்சிறந்த உத்தமியாகிய நமது கோமளவல்லியே என்பதை நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள்.

அப்படுபாவி சுகானந்தன் அக் கள்ளங் கபடமற்ற சிறுமியாகிய கோமளவல்லியைப் பலாத்காரமாக ஆட்களை ஏவித் தூக்கிக்கொண்டு பயங்கரமான அவனது இடத்தில் சேர்த்ததையும், அவள் மிகச் சாமர்த்தியமாகத் தப்பியோட முயன்றபோது அவன் அவளைப்பிடித்து மறுபடியும் அடைக்க முயன்றதும் அப்போது ஒரு பயங்கரமான பெண் உருவம் அங்கே தோன்றி அவளை அவனிடமிருந்து விடுவித்து ஒரு வண்டியிலேற்றிச் சௌகரியமாக அவளுடைய வீட்டில் கொண்டுபோய் விட்டதையும், அம்மாதே இந்த விஷயங்களை வெளியிடாமல் மறந்துவிடும்படி கோமளவல்லியைக் கேட்டுக்கொண்டதும் நமது இந்நாவலின் ஆரம்பத்தில் விவரமாகக்கூறப் பட்டிருப்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொண்டிருப்பீர்கள் என்றே நம்புகிறோம். இவ்வாறு நடந்ததன் மறுநாள் ஜகதீசன் மடத்துக்குச்சென்று சுகானந்தனிடம் அவன் கோமளவல்லியை எத்தகையதொந்திரவும் செய்யலாகாதென எச்சரிக்கைசெய்யச் சென்றபோது அந்தக் கரிய ஆடை அணிந்தமாது ஜகதீசனிடம் முன்னாள் இரவு நடந்த விவரங்களையும் கூறினுள். அந்த சம்பவம் நடந்து பத்துமாதங்கள் கழிந்து விட்டன. அன்றுமுதல் இப்பத்துமாதமும் சுகானந்

தன் கோமளவல்லிக்கு எத்தகைய தொந்திரவும் செய்ய வில்லை. இடையில் அவன் சொற்பகாலம் கந்தபுரியைவிட்டு வெளியிலும் போயிருந்தான். எப்படியாயினும் அவனுக்கு அந்த ஞாபகம்மட்டும் விடவில்லை. சதா கோமளவல்லியின் அழகிய உருவமே அவனது மனக்கண்முன் தோன்றி அவ னுக்குக் காமத்தையும் ஆத்திரத்தையும் ஊட்டிவந்தது. அவன் உண்மையில் அவளுடைய அழகையும் குணத்தையும் கண்டு அவளை நேசிக்கவில்லை. அல்லது அவளிடம் அவனுக் குத் தூய அன்பு ஏற்படவில்லை. ஆனுல் அவளது கற்பைக் கெடுத்து அவள் அழகைத்தான் பலாத்காரமாகவேனும் அனுபவித்துவிட வேண்டுமென்னும் மிருக எண்ணமே அவ னுக்கு அதிகரித்தது.

உண்மையில் பெரும்பான்மையான ஆடவர்கள் ஆண் பெண் சேர்க்கையின் புனிதத்தன்மையை அறியவில்லை யென்றே கூறவேண்டும். விவாகம் செய்துகொண்ட ஆட வர்களாயினும் சரி, அவர்கள் தங்கள் மனைவியர், தங்கள் வாழ்க்கைத்துணைவியர் என்றும் சகல இன்பதுன்பங்களிலும் பங்கெடுத்துக் கொள்ளக்கூடிய உரிமையுடையவர்களென் றும் கருதாமல், தங்கள் காமவேட்கையைத் தீர்ப்பதற்காக இறைவனுல் ஏற்படுத்தப்பட்ட ஒருவகை இயந்திரம் எனக் கருதி தங்களுக்கு ஆத்திரமுண்டான போதெல்லாம், அம் மாதுசிரோமணிகளிடம் சென்று முட்டிக்கொள்வதென்ருல் அதுவும் விபசாரமும் மிருக சுபாமுமேயாகும். ஆண் பெண் சேர்க்கையில் இயற்கை இன்பத்தை நுகரவேண்டுமாயின் மாதர்களுக்கே அத்தகைய சேர்க்கை வேண்டுமென்னும் மனேஎழுச்சி உண்டாகும்போது தான் ஆடவர்கள் அதற்கு இணங்கவேண்டும். இப்படிப்பட்ட எழுச்சி நம் மாதர்களுக் குப் பொதுவாகப் பதினைந்து தினங்களுக்கு ஒருமுறைதான்

உண்டாவது சகஜம். இதனால்தான் நமது பெரியோர்கள் "மாதமிருமுறை மாதரொடுசேரல்" என விதி வகுத்திருக்கின்றனர். மாதர்கள் இஷ்டப்படாத சேர்க்கை பிணத்தோடு அனுபவித்த சேர்க்கையேயாகும். கந்தபுரிமடத்துக்கு குருவாய் வந்த சுகானந்தனுக்கு இந்த அறிவு இல்லாமற்போனதும் உலகில் பரிசுத்தத்தையும் தூய்மையையும் பாவச்செய்யும் கடமையை மேற்கொண்ட மதகுரு இவ்வாறு தீயகாரியத்தில் இறங்கியதும் அருவருக்கத்தக்கதே. இத்தகைய வேடமணிந்த குருக்கள் பலர் இருக்கிறார்களென்பதைத் தெளிவாகவே இந்நாவலில் கூறப்பட்டிருக்கிறது.

சுகானந்தன் கந்தபுரிக்குத் திரும்பியதுமுதல் கோமளவல்லியைக் கவனித்துதான் வருகிறான். அவள் மீனும்பாளுடன் அடிக்கடி வெளியில் உலாவுவதைக் காண்கிறான். மீனும்பாளும் சிறுவயதினளாயும், ரூபவதியாகவும் இருந்தாலும் அவனது மனமெல்லாம் அவளைவிடச் சிறந்த அழகு வாய்ந்த கோமளத்தினிடமே நாடியது. வாஸ்தவத்திலேயே நமது கோமளவல்லி உலகிலேயே அழகிற்சிறந்தவள். அவளது ரூபலாவண்யம் எப்படிப்பட்ட மனோதிடமுள்ளவர்களையும் மயக்கக்கூடிய சக்திவாய்ந்ததாக இருந்தது. ஸ்திரீலோலனான சுகானந்தன் அச்சக்திக்கு அடிமையானதில் ஆச்சர்யமொன்றுமில்லை. அவளுடைய அழகு வர்ணனைக்கு எட்டாதது. அவளுடைய பவழம்போன்ற சிவந்த அதரங்களைக் காண்போர் தங்கள் உயிரையாகிலும் தியாகம்செய்து அதரபானம் செய்யவேண்டுமென்றே விரும்புவர். அவளுடைய கண்களினின்றும் வெளிப்பட்ட பிரகாசமானது எவர் மனதையும் கவரக்கூடியதாய் இருந்தது. ஆனால் இவ்வளவு அழகுகளையும், அவள் எந்த ஆடவனுக்காக இறைவனால் படைக்கப்பட்டாளோ அவனே அனுபவிக்கவேண்டுமே

யொழிய கண்டவர்கள் அதற்கு ஆசைப்படுவது இறைவ னின் எண்ணத்துக்கு விரோதமாகும். அவளுடைய அழகு சுகானந்தனுடைய உள்ளத்தில் தீய எண்ணத்தை உண்டாக்கி யிருக்குமாயின் அது அவளுடைய குற்றமாகாது. சுகானந்த னுடைய அடக்கமின்மையையும் அயோக்கியத்தனத்தை யுமே அது காட்டுகின்றது.

சுகானந்தன், நாம் இந்த அத்தியாயத்தை ஆரம்பித்த தினத்தன்று பகல் தன்மடத்தைச் சேர்ந்த தோட்டத்தில் மேலும் கீழுமாக உலாவிக்கொண்டிருக்கையில் அவன் மனம் முழுதும் கோமளவல்லியின்மீதே பாய்ந்திருந்தது. அவளை அவன் ஒருமணி நேரத்துக்கு முன்புதான் அவள் கந்தபுரி யில் ஒரு கடைக்குள் தன் தோழி மீனம்பாளுடன் சென் றதைக் கண்டிருக்கிறான். அப்படி கண்டபோது அவன் அவளை ஏறெடுத்துப் பார்க்கவும் தைரியம் கொள்ளவில்லை. தூரத்தில் நின்று ஒளிந்திருந்தும் பார்க்கவில்லை. ஏனெனின் ஜகதீசன் அவனை எச்சரிக்கை செய்திருக்கிறானல்லவா? ஆகவே அவன் எங்கேனும் நின்றிருந்து பார்த்துவிடுவான் என்னும் அச்சம்தான் அவனுக்கு அதிகமாயிருந்தது. சுகா னந்தன் கோமளவல்லியை உற்றுப் பார்க்கவில்லையென்று லும் அவள் தன் தோழியுடன் ஒரு கடையில் நுழைந்ததை அவன் பார்த்துவிட்டபடியால் அவளுடைய உருவமானது ஒரு துப்பாக்கியின் குண்டுபோல் அவனது இருதயத்தில் பாய்ந்து அவன் உள்ளத்தில் ஆசை என்னும் தீயை மூட்டி விட்டது. அவன் என்செய்வான் பாவம்! அத்தீயோ மிக உக்கிரத்துடன் எரிந்துகொண்டிருக்கிறது. ஆகவே அவன் ஓரிடத்தில் மறைந்திருந்து அப்பெண்மணிகளிருவரும் கடையி லிருந்து வெளிவரும் வரையில் காத்திருந்து பின்னர் அவர்கள் பின்னாலேயே சென்றான். ஆனால் அவர்கள் தன் மடத்தைத்

தாண்டிப்போகும் வரையில்தான் அவர்கள் பின்னல் சென்ருனே தவிர அதற்கப்பாலும் செல்ல அவனுக்கும் தைரியமிருக்கவில்லை. ஆகவே அவன் தன்மடத்தைச் சேர்ந்த அத்தோட்டத்திலேயே நின்றுகொண்டு, அப்பெண்களிருவரும் போய்விட்டார்களே என்ற ஏமாற்றத்துடன் அதிக ஆத்திரமடைந்தவனுய் "அப்பெண் என்மீது ஆட்சிபுரிகின்ருளே. அதனுல் நான் பல குற்றங்களுக்கும் கஷ்டங்களுக்கும் ஆளாகவேண்டும்போ லிருக்கிறதே" என்று நினைத்தான்.

மேலும் அவனுக்குக் காமம் அதிகரித்துவிட்டது. ஆகவே அவன் மீண்டும், "ஓ அவளை ஒருமணி நேரம் வரையிலேனும் நான் அடைவதற்காக என்வாழ்வில் பத்து வருஷ காலத்தையும் தியாகம்செய்யத் தயாராக இருக்கிறேன். நான் அவளுடைய இன்பத்தைப்பெருமல் இருக்க முடியாது. அவளுக்காக என்தேகமும் ஆத்மாவும் அழிந்துவிட வேண்டும்போல் இருக்கிறது. சீ! ஒரு சில நிமிஷநேர இன்பத்துக்காக நான் தூக்குமேடையில் ஏறி உயிர் துறப்பதா? ஆனல் அவளை நான் ஒரு இரவு முழுவதும் ஆலிங்கனம் செய்து கொள்ளக்கூடிய பாக்கியம் கிடைக்குமானல் அப்படிப்பட்ட மோட்சம்போன்ற நிலைமையைப்பெற எவ்வித தியாகத்தையும் செய்யத் தயங்கமாட்டேன். அடடா! நான் இவ்வாறெல்லாம் என் உணர்ச்சிக்கு அடிமையாய்ப் போவதென்றல் அது முட்டாள் தனமல்லவா? கேவலம் ஒரு பெண்ணுக்காக நான் என் ஸ்தானத்தையும், அதிர்ஷ்டத்தையும், செல்வாக்கையும் இழந்துவிடுவதா? அப்படிச் செய்வதாயின் நான் ஒரு பெரிய மடையனுகத்தானே இருக்கவேண்டும்?" என்று நினைத்தான். உண்மையிலேயே அவன் தன் கெட்ட எண்ணத்தினின்றும் தப்ப முயல்

பவனேபோல் மிக அவசரமாக மேலும் கீழும் நடக்க ஆரம்பித்தான். ஆயினும் அவனுடைய மனக்கண்முன் கோமளவல்லியின் உருவம்தான் பளிச் பளிச்சென்று மிகப் பிரகாசத்துடன் தோன்றியது. ஆகவே அவன் அவளுடைய அழகைப்பற்றிச் சிந்திப்பதிலேயே தன் மனத்தைச் செலுத்தவே அவன் அப்படியே அவள் அழகை தான் அனுபவித்து இன்புறுவதுபோலும் மனத்தால் நினைத்துக் கொண்டான்.

உடனே, "ஆ! நான் பைத்தியக்காரனாகத்தான் போக வேண்டும். நான் கோமளவல்லியையாவது அடியோடு மறந்துவிடவேண்டும். அல்லது அவளுடைய இன்பத்தை யாவது நுகர்ந்துவிடவேண்டும். இன்றேல் எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்" என்று உரக்கக்கூவினன். அப்போது தான் நின்றிருந்த அந்த அடர்ந்த தோட்டத்தின் மரக்கிளைகள் அசைந்ததேபோல் சப்தம் தோன்றியது. உடனே சுகானந்தன் திரும்பிப்பார்த்தான். யாரும் அவன் கண்ணில் தென்படவில்லை. ஆகவே அவன் மறுபடியும், "இங்கே இப்போது யார் வருவார்கள். யாருமில்லை. என்ன ஆபத்து வந்தாலும் சரி; நான் உடனேபோய் கோமளவல்லியைப்பிடித்து என் இஷ்டப்படி அவளுடைய இன்பத்தை அனுபவித்துவிட்டு வருவதேசரி" என்று உரக்கக்கூவினன். தன் மனோவிகாரத்தில் அவன் இவ்வாறு உரக்கக்கூவுவதையும் உணரவில்லை. இவ்வாறு கூறிக்கொண்டே அவன் வேறு பக்கமாகத் திரும்பி கோமளவல்லியின் வீடு இருக்கும் திசையை நோக்கி நடக்கலானன். அவன் அவ்வீட்டின் திசையை நோக்கி நடந்தானே தவிர அங்குபோய் என்னசெய்வது? யாருடன் என்ன பேசுவது? என்னும் விஷயங்களை முடிவு செய்யவேயில்லை. சரசரவென்று அவள் வீட்டினருகில் சென்று எங்கேனும் ஒளிந்திருந்து அவள் வீட்டைவிட்டுத்

தோட்டத்தில் வருவாளா என ஆவலுடன் காத்திருப்ப தென்று புறப்பட்டானேயொழிய அவள் வருவதாகவே வைத்துக்கொண்டாலும் பிறகு என்னசெய்வதென்று அவன் கருதவேயில்லை. அவளை மிரட்டியோ அல்லது அவள் அடி பணிந்தோ அவன் தன் காரியத்தைச் சாதித்துக்கொண்டு விடலாமென நினைத்திருப்பானென நினைக்கிறீர்களா? இல் லவே இல்லை. அவ்வளவு பரிசுத்தமான கற்புடன்கூடிய அவ ளிடம் அவனுடைய மிரட்டலோ அல்லது பணிதலோ செல் லாது. ஆனால் கோமளவல்லியிடம அவனுக்கு ஏற்பட்ட மோகத்துக்கு அவன் இரையாய்விட்டதால் அது அவனை இழுத்துக்கொண்டுபோக அவனும் அதன்பின் ஓடலானான்.

அவன் இவ்வாறு நினைத்துக்கொண்டு மடத்தைச் சேர்ந்த தோட்டத்தைவிட்டு வெளியே போனதும் அந்த அடர்ந்த தோட்டத்தின் மற்றொரு புறத்தினின்றும் கரிய உடையணிந்த ஒரு பெண் உருவம் அவன்முன் வந்து நின் றது. அவளுடைய முகமோ துக்கத்தால் வெளுத்திருந்தது. அவளது நடையும் அவள் ஏதோ கவலை நிரம்பியவளாய் இருக்கிறாள் என்பதையே காட்டியது. எனினும் ஒருகாலத் தில் அவள் மிக அழகுடையவளாய் இருந்திருக்க வேண்டு மென்று உணரக்கூடிய குறிப்புகள் பூரணமாக மறைந்துவிட வில்லை. அவள் சுமார் நாற்பது வயதுடையவள்போலக் காணப்பட்டாள். அவள் கூந்தல் கருமையானதாகவே இருந் தது. கூன் முதலிய சங்கடங்கள் ஒன்றும் ஏற்பட்டிருக்க வில்லை. அவள் அணிந்திருந்த கருப்பு ஆடையும் அழகானதா யிருந்ததேயொழிய விலையுயர்ந்ததாய் இருக்கவில்லை. மொத் தத்தில் அவள் ஏதோ நல்ல குடும்பத்தில் தான் பிறந்து சௌகரியமாகவே வளர்ந்து பின்னால் ஏதோ கஷ்டத்திற் குட்பட்டிருப்பவள்போல் காணப்பட்டாள்.

அந்தத் தோட்டத்தினின்றும் வெளிப்பட்ட கரிய ஆடையை அணிந்த அம்மாது, அவன் எனக்கு எவ்வளவு தான் துயரம் விளைவித்தாலும் நான் அவனை நேசிக்கின்றேன். அவன் என்னை இப்போது வெறுத்தபோதிலும் அவன் வேறு பல கஷ்டங்களில் அகப்படாமல் தப்பவும், மற்றும் பலர் அவனது கொடுமைக்கு ஆளாகாமலிருக்கும்படி தடுக்கவும் நான் அந்தந்த சமயங்களில் வந்து சேருகிறேன். அவ்வாறு வந்து அவன் யாருக்கும் எத்தகைய கெடுதியும் செய்யாதபடி தடுக்கிறேன். அப்படியிருந்தும் நான் அவனைப் பின்தொடர்ந்து செல்லுகிறேன் என்பதை அவன் இன்னமும் கண்டு கொள்ளவில்லை. இப்போதும் அதோ பார்! அவன் காமவேட்கையை அடக்கமுடியாமல் பித்தம் பிடித்தவன் போல் ஓடுகின்றான். இதனால் அவன் அடியோடு அழிந்து போவான். ஆகவே அவனைக் காக்கவேண்டியது என் கடமை. அவனைமட்டுமா? அந்த நற்குணவதியாகிய கோமளாவையும் காக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன்; இன்றேல் அவனுடைய ஆத்திரத்தில் அவன் அவளுடைய வாழ்க்கையையே கெடுத்து விடுவான்'' என்று தனக்குள் கூறிக் கொண்டாள்.

அம்மாது அவ்வாறு நினைத்துக்கொண் டிருந்தபோது, தனக்குப் பின்னால் யாரோ ஒருவர் நடந்து வருவதுபோல் தோன்றியது. ஆகவே அவள் பின்பக்கமாகத் திரும்பிப் பார்த்ததில் தன்னைப்போன்ற மற்றொருமாது மிக்க கருப்பான உடையுடனும் துக்கத்தோடு கூடிய முகத்துடனும் அங்கு நிற்பதைக்கண்டாள். அவளுக்கு வயது சுமார் நாற்பத்தாறு இருக்கும். அவளும் வாலிபத்தில் மிக அழகுடையவளாகவே இருந்திருக்கவேண்டுமென்று தோன்றியது. இப்போதும் அவள் துக்கத்துடன் இருந்தாளென்றாலும் நல்ல

அழகுடையவளாகவும், தேகவலிமை யுடையவளாகவும் காணப்பட்டாள். அம்மாதைக்கண்டதும் முன் இருந்தமாது அவள் யாரென்பதை ஒருவாறு யூகித்தறிந்துகொண்டதால் பல வருஷங்களுக்குப்பின் ஒருவரைக்கண்டால் எப்படி திடீரென்று பெருமூச்சு விடுவது வழக்கமோ. அதுபோல் அவளும் பெருமூச்செறிந்தாள். உடனே புதிதாகவந்த அம்மாதும் தன்னைக்கண்டு பெருமூச்செறிந்தவள் யார் என்பதை அறிந்துகொண்டு விட்டாள்.

ஆகவே இருவரும் பரஸ்பரம் ஒருவரையொருவர் அறிந்துகொண்டதும் முன்னமே இருந்தமாது புதிதாக வந்தவளைக்கண்டு "மரகதவல்லி" என்றாள். உடனே மரகதவல்லி என்னும் அம்மாது, "அடடா! நீயா லீலாவதியா?" என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள். அதற்கு லீலாவதி, "ஆம், நான்தான் உன் சகோதரி; சுகானந்த ஸ்வாமியினுடைய காதலுக்கு இரையானவள்" என்று கூறினாள். பிறகு இருசகோதரிகளும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டார்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் ஒருவரையொருவர் சந்தித்ததால் அதிக சந்தோஷமடைந்தனர். ஆனால் அவர்களுடை சந்தோஷம் மறு நிமிஷமே மறைந்துவிட்டது. ஏனெனின் தங்களுக்குப் பலகாலமாக நேர்ந்து வந்திருக்கும் சங்கடங்களைப்பற்றிச் சிந்திக்கவே அவர்களுக்குத் துக்கம் அதிகரித்துவிட்டது. அவர்களிருவரும் இவ்வாறு பேசிக்கொண்டிருந்தபோதே ஒவ்வொருத்தியிடமும் எத்தகைய மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்பதைக் கவனித்தார்கள். அவ்வாறு கவனித்ததிலிருந்து ஒவ்வொருத்தியும் சொல்லமுடியாத அவ்வளவு துயரங்களையே அனுபவித்து வந்திருக்கவேண்டுமென்றும், ஆகவே ஒருவருக்கொருவர் சமாதானம் சொல்லக்கூடிய நிலைமையில்: இல்லை என்பதையும் உணர்ந்தார்கள்.

மரகதவல்லி:—லீலாவதி, என்னைப் பார்த்தமாத்திரத்தில் நான் இன்னாளென்பதை நீ அறிந்துகொண்டாயா?

லீலாவதி:—ஆம்; தெரிந்துகொண்டேன். நீயும் அவ்வாறே தெரிந்துகொண்டாயா? நீ என்னைச் சந்தித்தபோது என் வாயிலிருந்து வெளியான வார்த்தைகளைக் கவனித்திருந்தால் நான் யாராயிருக்க வேண்டுமென்பதை நீ அறிந்துகொண்டு விட்டிருக்கலாம்.

மரகத:—நான் தெரிந்துகொண்டு விட்டிருக்கமுடியும். ஆனால் நீ மிகவும் மாறுதலடைந்துவிட் டிருக்கிறாய். சிறிதும் அடையாளமே தெரியவில்லை.

லீலா:—ஆம்; நான் அக்குற்றத்தைச்செய்து இன்னும் அதிக காலமாய் விடவில்லையே. இதற்குள் என்னுடைய துக்கம் எப்படி மறைந்துவிடும்? அந்தத் துக்கத்தினாலும், நான் அன்புடன் நேசித்தவனிடமிருந்து நான் படும் கஷ்டத்தாலும் இப்படி நான் உருக்குலைந்துவிட்டேன்.

மரகத:—குற்றமா! அது வாஸ்தவந்தானா? நீ அப்படியா செய்துவிட்டாய்!

லீலா:—ஆம்; வாஸ்தவந்தான்! என்செய்வது? அச்சத்தால் மதிமயங்கி என்னசெய்வதென்றுதோன்றாமல் கொன்று விட்டேன்.

மரகத:—அப்படியானால் அது வேண்டுமென்றே செய்த குற்றமல்ல. நீ என்னசெய்வாய்? அச்சத்தால் வேறு வழியில்லாமல் அவ்வாறு செய்யவேண்டியதாயிற்று.

லீலா:—ஆம்; கடவுளே! நான் என்செய்வேன். அப்போது எனக்குப் பைத்தியம் பிடித்ததுபோலல்லவா ஆய்விட்டது. எனினும் நான் எப்படி என்முகத்தை எனக்குத்

தெரிந்தவர்களிடம் அதிலும் என் சகோதரிகளிடம் காண்பிக்க முடியும்? மனச்சாட்சி ஒன்று இருக்கிறதல்லவா? அது அடித்துக்கொண்டுதானே இருக்கிறது.

மரகத:—அப்படி நினைக்காதே. இதற்காகவெல்லாம் நாங்கள் உன்னைப் பகிஷ்கரித்துவிடுவோமா? ஏனெனின் நானோ அல்லது நமது மேனகையோ மட்டும் என்ன பரிசுத்தமான வாழ்க்கையை நடத்தினோம்? நமது கமலமும் உன்னிடம் அன்புள்ளவளாயும் பச்சாத்தாபமுள்ளவளாயுமே இருந்தாள்.

லீலா:—நான் இறந்துவிட்டேனென்றே நீங்கள் நினைத்திருப்பீர்களென நிச்சயமாக நம்புகிறேன்.

மரகத:—ஆம்; அதில் சந்தேகமென்ன? வேறு என்னதான் நினைக்கமுடியும்? கமலத்தின் சமாசாரமென்ன? அதைப் பற்றி ஏதேனும் உனக்குத் தெரியுமா?

லீலா:—அவள் உயிருடன் சௌக்கியமாகவே இருக்கிறாள். **அதில் ஒன்றும் சந்தேகமில்லை. ஆனால் அவள் உயி**ருடன் இருக்கிறாளே தவிர அவள் பாரிசநோயால் பீடிக்கப்படுவதால் அவளுக்கு உலகில் நடைபெறுவது ஒன்றுமே தெரிவதில்லை. பேசவும், அறியவும் முடியவில்லை. இவ்வாறு மூன்று வருஷங்களாக அவள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறாள்.

மரகத:—ஐயோ கடவுளே! என் சகோதரிக்கு இக்கதியா ஏற்படவேண்டும்? அவள் எங்கே யாருடன் வசிக்கின்றாள். அவளுக்கு யார் சிஷ்ருஷை செய்கின்றார்கள்? அவளுடைய இதரநிலைமைகள் எப்படி? நமது சகோதரி மேனகையின் குழந்தைகளின் கதி என்ன ஆயிற்று? எல்லாம் உனக்குத் தெரிந்திருந்தால் விவரமாகச் சொல்

பார்ப்போம். அதை அறிய ஆவல் அதிகமாயிருக்கிறது.

லீலா:—ஒரு குமாரி சுந்தரம்மாளுடன் இருக்கிறாள். மற்றொரு குமாரி இரத்தினபுரியில் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் யாருடன் எதற்காக இருக்கிறாள் என்பது தெரியவில்லை.

மரகத:—நமது வியாதியுடைய சகோதரி கமலம் என்ன பெயருடன் எங்கே வசிக்கிறாள்.

லீலா:—சுந்தரம்மாள் என்னும் பெயருடன்.

மரகத:—என்ன! சுந்தரம்மாளா! ஓகோ! இதோ பக்கத்தில் சிறு வீட்டில் சுந்தரம்மாள் என்று ஒருத்தி இருக்கிறாளாமே அவளா! நானும் அங்கேதான் போகிறேன். கந்தபுரி ஓட்டலில் நான் அந்த இடத்தைப்பற்றித் தெரிந்துகொண்டேன்.

லீலா:—ஓகோ! எனக்கும் விஷயம் சிறிதுசிறிதாகத் தெரிகிறது. அங்கே கோமளவல்லியுடன் மீனும்பாளென்று ஒருபெண் இருப்பதாகத் தெரிந்துகொண்டேன். ஆனால் அவள் உன் மகள் என்பதை நான் அறியேன். ஓகோ! இப்படியா சங்கதி!

மரகத:—ஆம்; அப்படித்தான். ஆயினும் அப்பெண்களிருவரும்கூடத் தாங்கள் இருவரும் சிறிய தாயார் பெரிய தாயார் மக்களாகிய சகோதரிகள் என்பதை அறியார். இல்லை. கட்டாயம் அறிந்துகொள்ள முடியாது.

லீலா:—அப்படியானால் நீ இப்போது அந்த சிறு வீட்டுக்குத்தான் போகிறாயோ?

மரகத:—சகோதரி! உனக்கு விஷயம் தெரியுமா? பரிதிபுரத்தில் என்னசம்பவங்கள் நேரிட்டனவென்பதை நீ கேள்விப்பட்டிருக்கிறாயோ?

லீலாவதி:—பரிதிபுரத்திலா? ஆஹா! பத்திரிகையில் எதை எதையோ படித்தேனே. அவர்கள் உன் குமாரிகள் என்பதையும் நான் நன்கு அறிந்துகொண்டேன். ஆனால் இரங்கம்மாளும் அம்புஜமும்தான் எனக்குத் தெரியும். மூன்றாவது குமாரியாகிய ஜானகியும், இப்போது கோமளவல்லியுடன் இருக்கும் நான்காவது குமாரியும் பிறந்தது எனக்குத் தெரியாதல்லவா? அப்பால் நாம் ஒருவரையொருவர் சந்திக்கவில்லை யன்றோ? அடடா! மாகதம்! நீ இவ்வளவு துக்கத்தில் மூழ்கி இருக்கிறாயே! நான் பல வருஷங்களாகவே இவ்வாறு மாறு வேடத்துடன் அலைவதென முடிவு செய்துவிட்டதால் சகோதரிகளை அடிக்கடி காணமுடியவில்லை. என் குழந்தை கடைசி அழுகை அழுதுவிட்டு இறந்தது முதல் நானும் இறக்கும்வரை துக்க ஆடையுடனேயே இருப்பதெனத் தீர்மானித்து அப்படியே இருந்துவருகிறேன்.

மரகத:—அப்படியானால் நீ இவ்வளவுகாலமாக எப்படி எங்கே வசித்துக்கொண் டிருக்கிறாய்?

லீலா:—சகோதரி! நாம் பரஸ்பரம் சொல்லிக்கொள்ள வேண்டிய விஷயம் நிறைய இருக்கிறது. நீ இப்போது உன் மகளைக் காணவேண்டுமென்னும் ஆவல் அதிகமுடையவளா யிருக்கிறாய்.

மரகத:—ஆம்; அவள் மன்னிப்பாளாயின் அவளைப் பார்க்கவே விரும்புகிறேன். ஏனெனின், பரிதிபுரத்தில் நடந்த இவ்வளவு அக்கிரமங்களுக்கும் நானே காரணம் என்பதை அவள் அறிவாள். அவர்கள் பரிதிபுரத்துக்குச் செல்லும்படி செய்தவளும் நானே. அங்குச் சென்ற மூன்று பெண்களில் ஒருத்தி கொலைக்காரர்களின் கத்

திக்கு இரையானாள். மற்ற இருவரும் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் பைத்தியம் பிடித்துக் கிடக்கிறார்கள்.

லீலா:—நீயா! இவ்வளவு கஷ்டங்களுக்கும் காரணம். இவ்வளவு குற்றங்களையும் உன்மீதே சாட்டிக்கொள்கிறாயா? என்ன காரியத்துக்காக உன் குமாரிகளை அங்கு அனுப்பினாய்? பத்திரிகைகளில் விஷயம் ஒன்றும் விவரமாய் வெளியாகவில்லை. ஆதலால் என்னநேர்ந்தது என்னும் பூரா விவரத்தையும் தெரிந்துகொள்ள முடியவில்லை.

மரகத:—ஆம்; இவைகளையெல்லாம் பத்திரிகையில் விவரமாகப் போடமாட்டார்கள். மிகவும் சுருக்கமாகத் தான் விஷயத்தின் சாராம்சத்தை மட்டும் வெளியிடுவார்கள். ஆயினும் பூரா விவரத்தையும் இப்போது சொல்லமுடியாமைக்காக வருந்துகிறேன். நாம் மற்றொரு முறை சந்திக்கும்போது விவரத்தைக் கூறுகிறேன்.

லீலா:—சரி, அப்படியானால் நாம் எப்போது எங்கே சந்திப்பது?

மரகத:—நீ எங்கே வசிக்கிறாய்? நான் கந்தபுரியில் பவுன்டன் ஓட்டலில் தங்கியிருக்கிறேன். நான் என்னுடன் மீனாம்பாளையும் அழைத்துச்செல்வதாக நிச்சயித்திருக்கிறேன். அவள், இவ்வளவு குற்றத்துக்கு ஜவாப்தாரியான தன் தாயுடன் வரச் சம்மதித்தால் அவளையும் அழைத்துக்கொண்டு பரிதிபுரம்போவதாக நிச்சயித்திருக்கிறேன். அவளுடைய சகோதரிகளைப் பார்த்துவிட்டு வரலாம்.

லீலா:—இங்கிருந்து சில மைல்கள் தூரத்திலுள்ள ஒரு சாதாரண குடியானவனுடைய குடிசையிலேயே நான் வாழ்ந்து வருகிறேன்.

மரகத:—அப்படியானல் நீ சமீபத்திலிருக்கிற உன் சகோதரி கமலத்தைப்போய்ப் பார்த்ததேயில்லையா?

லீலா:—இல்லை; சில வருஷங்களுக்குமுன் எனக்கு அந்தக் கஷ்டம் ஏற்பட்டதுமுதல் நான் அவளைப்போய்ப் பார்க்கவேயில்லை. ஏனெனின் கமலம் மிகவும் பரிசுத்த மானவள். நல்லவள். அவள்முன் போவதற்கே எனக்கு வெட்கமாக இருக்கிறது.

மரகத:—சகோதரியே! சில வகையான உறுதிமொழிகளை நாம் செய்துகொள்ளக்கூடாது. ஏனென்றால் பின்னல் அவைகளால் அதிக கஷ்டமே ஏற்படும். அப்படிப் பட்டவைகளில் இதுவும் ஒன்று. இந்த விரதத்தை நீ சரிவரக் கடைப்பிடிப்பதென்றால் இப்போது என்னை யும் பார்த்துப் பேசி யிருக்கக்கூடாதல்லவா? ஆதலின் நீ, படுக்கையோடிருக்கும் உன் சகோதரியைக்காணச் சிறிதும் தாமதிக்கலாகாது.

லீலா:—நான் எப்போதோ என் விரதத்தை மறந்து அங்கு போய்விட்டிருப்பேன். ஆனல் அவள் மாறுபெய ருடன் இருக்கும்போது எப்படி அங்கு போகமுடியும்? அவள் என்னை என்ன கேள்விகள் கேட்பாளோ? நான் என்னபதில் சொல்வதோ என்பது ஒன்றும் தெரியாமல் அங்கு எப்படிப்போவது?

மரகத:—எப்படியிருந்தாலும் நான் இப்போது அந்த வீட்டுக் குப் போவது நிச்சயம். அங்கே கோமளவல்லியிடம் நான் படுக்கையோடிருக்கும் சுந்தரம்மாளின் தங்கை யென்றும், கோமளவல்லியின் சிறியதாயாரென்றும் கூறுவேன். ஆனல் என்குமாரி மீனம்பாள் என்னைப் பற்றிக் கோமளத்தினிடம் என்ன கூறி யிருக்கிறளோ தெரியவில்லை.

லீலா:—அப்படியானால் சிறிது யோசித்தே உன்காரியத்தில் இறங்கவும். நீ அந்த வீட்டுக்குச்சென்று கோமளத்தி னிடம் நீ மீனம்பாளின் தாயார் என்றுமட்டும் சொல்லி விட்டு உன் குமாரியை அழைத்துக்கொண்டுபோய் அவள் ஏதேனும் வெளியிட்டுவிட்டிருக்கிறாளா என்று விசாரித்துக்கொள். ஏனென்றால் கோமளவல்லி நல்ல சுபாவமுடையவள். நம்முடைய விஷயங்களைக் கேள் விப்பட்டால் உண்மையில் வருந்துவாள். இதனால் அவளுடைய திருப்தியான வாழ்க்கையில் ஒருவித களங் கம் ஏற்படும். ஆதலின் சர்வஜாக்கிரதையாக நடந்து கொள்வதே நலம்.

மரகத:—லீலாவதி, நீ புத்திசாலித்தனமான யோசனையையே கூறி யிருக்கிறாய். நானும் அப்படியே நடந்து கொள் வேன். நான் இன்று என்மகள் மீனம்பாளுடன் மட் டும் விவரமாகப் பேசுகின்றேன். நாளையதினம் நீ, நான் தங்கியிருக்கும் ஓட்டலுக்கு வந்து என்னைச் சந்திக்கி றாயா? பிறகு நாம் எப்படி நடந்துகொள்வது என்பது பற்றி யோசிப்போம்.

லீலா:—அப்படியே ஆகட்டும். நான் உன்னை நாளையதினம் சந்திக்கிறேன். அதுவரை நிதானமாகவே காரியத்தைச் செய். எப்போதும் நிதானம் தேவை. உனக்கு வந் தனம். எனக்கு உத்தரவுகொடு.

பிறகு அவர்களிருவரும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டு அங்கிருந்து பிரிந்தனர். மரகதவல்லி அவ்வீட்டை நோக்கிப் புறப்பட்டாள்.

161 - வது அத்தியாயம்

மரகதவல்லி ஓட்டலில் பூராவழியையும் விவரமாகக் கேட்டுத் தெரிந்துகொண் டிருந்தபடியால் அதிக சிரமப்படாமல் எளிதில் சுந்தரம்மாளின் வீட்டை யடைந்தாள். அந்த வீட்டைச்சுற்றிலும் ஒரு தோட்டமுண்டு. அவள் அந்தத் தோட்டத்தின் வாயில் கதவைத் திறந்து கொண்டு வீட்டுவாயிலின் முன் சென்றுகொண் டிருந்த போது அவள் வருவதைப் பார்த்துவிட்டு அவள் குமாரி மீனம்பாள் சந்தோஷமில்லாவிட்டாலும் அளவுகடந்த ஆச்சர்யத்துடன் தனக்கும் தெரியாமல் கூக்குரலிட்டுக்கொண்டு தன் தாயை அடைந்தாள். மீனம்பாளும் அதிக துக்கத்துடனேயே இருந்தபடியால் அவள் பரிதிபுரத்தில் நடந்த சம்பவங்களைப்பற்றி அறிந்திருக்கிறாள் என்று மரகதவல்லி தெரிந்து கொண்டாள். மீனம்பாள் பத்திரிகை மூலமாகச் சில விஷயங்களை அறிந்துகொண்டதுடன் கோமளவல்லியின் காதலனாகிய ஜகதீசனும் அப்போதைக்கப்போது அங்கிருந்து பல விஷயங்களை அறிவித்துக்கொண்டிருந்தானாதலால் அதை மீனம்பாளும் அறிய ஹேதுவாயிற்று.

தன்மகளைக் கண்டதும் மரகதவல்லிக்கு அவமானமும் துக்கமும் அதிகரித்துவிட்டது. ஆகவே கம்பியகுரலுடன், "என் அன்புள்ள குழந்தையே! என்னை மன்னிப்பாயாக" என்றாள். அதற்கு அப்பெண் கண்ணீர் வடித்துக்கொண்டே, "அம்மா! அப்படியெல்லாம் கேட்கவேண்டாம். நாம் முன்னமே இவ்வளவு துக்கத்துடன் இருக்கிறோமே; இன்னும் அதை ஏன் பெருக்கிக்கொள்ளவேண்டும்" என்று சமாதானம் கூறினாள்.

மரகத:—நான் கோமளவல்லியைக் காணுமுன் உன்னிடம் பல விஷயங்களைப்பற்றிப் பேசவேண்டி யிருக்கிறது. ஆதலின் பக்கத்தில் எங்கேனும் சௌகரியமான இடத்துக்குச் செல்வோம் வா.

மீனும்:—அதோ இத்தோட்டத்தின் ஒரு மூலையில் மாங்களடர்ந்த இடத்தில் ஒரு பெஞ்சு போடப்பட்டிருக்கிறது. அங்குபோய் உட்கார்ந்து கொள்வோம். நீ சொல்லவேண்டியவற்றை யெல்லாம் சொல்.

அவர்களிருவரும் உடனே நேராக அவ்விடத்துக்குச் சென்றார்கள். மரகதவல்லி தன் மகளிடம் தன்னைத் தழுவிக் கொள்ளும்படி கேட்டாள். உடனே அப்படியே இருவரும் தழுவிக்கொண்டார்கள். பெற்ற மனத்தின் பித்தைப்பற்றியும் கூறவேண்டுமா? தாய்மையின் பெருமையைப்பற்றி என்னென்று எழுதுவது! தாயும் மகளும் பிரிந்து பல வருஷங்களானதுடன் இடையில் அதிக கஷ்டங்களடைந்ததால் பரஸ்பரம் ஒருவரையொருவர் கண்டு அணைத்துக்கொண்ட மாத்திரத்தில் அவர்களின் உள்ளம் புளகாங்கிதமடைந்தது. அப்போது தாயார், "அம்மா! என்னைத் தேற்றுவதற்காக உன்னையேனும் இத்தகைய நல்ல சௌகரியமான நிலைமையில் வைத்ததற்காக இறைவனுக்கு மனமார்ந்த வந்தனம் செலுத்துகின்றேன்" என்று கூறினாள்.

பிறகு சில நிமிஷங்கள்வரை இருவருமே வாய்திறந்து பேசவில்லை. அவ்வளவு துக்கம் அதிகரித்திருந்தது. அவர்களிருவருடைய கண்களினின்றும் நீர் ஆறாய்ப் பெருகிற்றேயொழிய வாயினின்றும் சொற்கள் புறப்படவில்லை. தாயார் தன் மகளை அச்சொற்ப நேரத்துக்குள் பலமுறை தழுவிக் கொண்டாள். அவள் தான் செய்த குற்றத்தாலும் சூழ்ச்சியாலும்தான் தன் மூன்று குமாரிகளுக்கு இவ்வளவு கஷ்டம்

ஏற்பட்டதென்பதை உணர்ந்துகொண்டதால் அதிக அச்சமடைந்திருந்தாள்.

தாயார்:—குழந்தாய்! நீ என்னை மன்னிக்கமுடியுமா என்பதைத் தெரிவி. ஒரு தாய் தன்னை மன்னிக்கும்படி தன் மகளைக்கேட்பது வருந்தத்தக்க விஷயமே என்றாலும் நான் அவ்வளவு பெரிய பொல்லாத பாவியாக இருக்கிறேன். என் குணமும் நடத்தையும் மிக இழிவானது என்பதை நானே உணர்கின்றேன்.

மகள்:—ஓ, எனதன்புள்ள தாயே! அப்படியெல்லாம் பேசவேண்டாம். ஆனால் நீ இவ்வாறு பேசுவதற்காக நான் ஒரு விஷயத்தில் சந்தோஷத்தையே அடைகின்றேன். ஏனென்றால் இதனால் நீ செய்துவிட்ட குற்றங்களுக்காகப் பச்சாதாபப்படுவதால் நான் மீண்டும் உன்னை அன்புடன் நேசிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது.

தாயார்:—மகளே! நீ குற்றத்தை மன்னிக்கும் நல்ல சுபாவமுடையவளாய் இருக்கிறாய். ஆனால் நீ என்னைப் பார்க்கும்போதெல்லாம் நான்தான் உன் சகோதரிகளைப் பரிதிபுரத்துக்கு அனுப்பக் காரணமாய் இருந்தேனென்பதையும் அதனால் ஒருத்தி இறந்ததுடன் மற்ற இருவர் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருக்க நேர்ந்ததென்பதையும் நீ நினைத்து என்னைப்பற்றிக் கேவலமாய்க் கருதுவாயல்லவா?

மகள்:—ஐயோ கடவுளே! நான் அவ்வாறு கனவிலும் கருதமாட்டேன். உன்மீது எல்லா குற்றங்களையும் நான் சுமத்தமாட்டேன். ஏனெனின் இவ்வளவு கஷ்டங்கள் ஏற்படுமென நீ முன்னரே அறிந்திருந்தால் அவ்வாறு உன் குமாரிகளை அனுப்பியிருக்க மாட்டாயல்லவா?

தாயார்:—இல்லவே இல்லை. எனக்குத் தெரிந்திருந்தால் நான் அனுப்பி யிருக்கமாட்டேன்; அதிருக்கட்டும். இப்போது நீ, உன் தாயைவிட்டு அலைந்தபோது உனக்கு இடமளித்துச் சௌகரியமளித்த இவ்விடத்தை விட்டு உன் தாயுடன் வந்து இருக்கச் சம்மதப்படுகிறாயா? ஏனெனின் நான் துக்கத்தால் தனியே நொந்துகொண்டிருக்கிறேனல்லவா? நீயாவது உடன் இருந்தால் கவலை சிறிது தணியும்.

மகள்:—ஆ! தடையில்லாமல் வருவேன். உன்னுடன் வந்து உனக்குச் சௌகரிய மளிப்பதுதானே என் கடமை.

தாயார்:—அப்படிச் சொல்லாதே. நான் சரியான நடத்தையினின்றும் எப்போது தவறினேனோ அப்போதே நமக்குள் இருக்கவேண்டிய பந்துத்வம் தவறிவிட்டது. ஆதலின் இனி நீ என் இஷ்டப்படி நடந்தால் அது தயாவிஷயமாகச் செய்யப்படும் காரியமேயன்றிக் கடமையாகாது. நான் செய்த குற்றங்களுக்குப் பரிகாரமாக எப்படிப்பட்ட தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கிறேன். உன்னையும் உன் இஷ்டப்படியே இருக்க அனுமதிப்பேன். அவசியமாயின் உனக்கு இவ்வளவு சௌகரியங்களை யளித்த இந்த இடத்திலேயே நீ இருக்கவும் சம்மதிப்பேன்.

மகள்:—தாயே! அவ்வாறு உன்னுடன் வருவது என்கடமை யல்லவென்று சொல்லவேண்டாம். கடமைமட்டுமல்ல என் விருப்பமும் அதுவே ஆகும். உன்னுடன் வருவதோடு நீ எங்குச்சென்றாலும் அங்குவரவும் தயாராயிருக்கிறேன்.

தாயார்:—குழந்தாய்! அவசரப்பட்டு எவ்வித முடிவுக்கும் வந்துவிடவேண்டாம். நான் இழைத்த கொடுமைகள்

எவ்வளவு தீமையானதென்பதை உணர்ந்திருக்கிறேன். இதற்குள் நான் அதை மறந்துவிடமுடியாது. அதை மறக்க இன்னும் சிலகாலம் செல்லும். அப்படி அதை மறக்குமுன் உன் முகத்தைக்காணவும் எனக்கு வெட்கமாகவே இருக்கிறது. நான் செய்த கொடுமைகளுக்கு இப்போது நான் அனுபவிக்கும் தண்டனை மிகக் குறைவானதேயாகும். என் கெட்டகாரியத்தை முடித்துக் கொள்வதற்காக உன்னையும் பறிகொடுத்தேனே. தெய்வாதீனமாகவல்லவோ நீ இங்கு அகப்பட்டாய்.

மகள்:—தாயே! இவ்வாறெல்லாம் பேசாதே. என்னல் பொறுக்கமுடியவில்லை. நீ என்னதான் குற்றம் செய்ததாகவே வைத்துக்கொண்டாலும் அதற்கேற்ற தண்டனையை அனுபவித்தாய்விட்டது. இப்போது உனக்கு ஆறுதல் கூறவேண்டியது என்னுடைய கடமை. நாம் விரைவில் சந்தோஷத்தை யடையமுடியாதென்றாலும் இப்போதும் துக்கத்துடன் திருப்தியையும் அடைந்தே இருக்கிறோம்.

தாயார்:—மகளே! நாம் இருவரும் சந்தித்தது முதல் நீ எனக்கு ஆறுதல் கூறிக்கொண்டுதான் இருக்கிறாய். இவ்வளவு அன்புடனும் பிரீதியுடனும் நீ நடந்து கொள்வாய் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. எனக்கு எவ்வளவு தகுதியோ அதைவிட அதிகமாகவே நீ என்னை உபசரித்துவிட்டாய். ஆனல் இனி ஒன்றை மட்டும் நிச்சயமாக நம்பு. அதாவது நான் பிழைத்திருக்கும்வரை சிறந்ததொரு தாயைப்போலவே நான் நடந்து கொள்வேன். அதிருக்கட்டும். நமது கோமளவல்லி என்னைப்பற்றி என்னென்ன தெரிந்துகொண்டிருக்கிறாள்? அதனல் அவளது அபிப்பிராயமென்ன என்பதைக்கூறு. நீ ஏதேனும் கூறியிருக்கிறாயா?

மகள்:—எனது அன்புள்ள நட்பினளாகிய கோமளத்தினிடமும் என் தாயைப்பற்றி அதிகம் ஒன்றும் கூறிவிடாமல் அவசியமான சில சாதாரண விஷயங்களைமட்டும் கூறியிருக்கிறேன். ஜகதீசனுக்கு எல்லாவிஷயங்களும் நன்ருய்த்தெரியும். ஆயினும் அவன்கூட சில முக்கிய காரணங்களைக்கொண்டே எல்லாவற்றையும் சொல்லி விடவில்லை. ஆ; தாயே! நான் தெரிந்துகொண்டேன். கோமளவல்லி, நீ எதிர்பார்க்கிறபடி ஆவ்வளவு மரியாதையாக உன்னை வரவேற்பாளோ இல்லையோ என்று சந்தேகப்படுகிருய். ஆனுல் அவள் மிக்க இரக்கமும் அன்பும் மன்னிக்குந் தன்மையும் உள்ளவள். அவளைப்போல் அவ்வளவு நல்லவர் யாருமில்லை. நீ இவ்வாறு மனவருத்த மடைந்திருக்கிருய் என்பதைமட்டும் நான் அவளுக்குத் தெரிவித்துவிட்டால்—ஆனுல் இரு. இங்கேயே நின்றிரு. இவ்விடத்தைவிட்டு அசையவேண்டாம். நான் இதோ வந்துவிடுகிறேன்.

இவ்வாறு கூறிக்கொண்டே மீனும்பாளென்னும் அப்பெண் அவ்வீட்டினுள் நுழைந்தாள். சில நிமிஷங்களுக்குள் அவள் தன் தோழி கோமளவல்லியுடன் வெளியே வந்தாள். அவர்களிருவரும் மரகதவல்லியம்மை உட்கார்ந்திருந்த இடத்துக்கு விரைவாக வந்தார்கள். மீனும்பாள் கோமளத்தை அறிமுகம் செய்து வைக்கும்போது மரகதவல்லி எழுந்து நின்ருள். கோமளவல்லி அவளை ஆவலுடன் வரவேற்றதிலிருந்து தன் மகள் அவளைப்பற்றிப் புகழ்ந்து பேசியது உண்மையே என்பதை அறிந்தாள்.

அப்போது கோமளவல்லி, "மரகதவல்லியம்மையே! என் அன்பார்ந்ததோழி தன் தாயைத் திரும்பப்பெற்ருள் என்னும் விஷயத்தை யறிந்ததும் எனக்கு எவ்வளவு சந்தோ

ஷமாயிருக்கும் என்பதைப்பற்றி நான் சொல்லவும் வேண்டுமோ?'' என்று கூறிக்கொண்டே மாகதவல்லியின் பக்கமாகத் தன் கையை நீட்டினுள். அப்போது மாகதவல்லி கோமளத்தின் கையைப் பிடித்துக்கொண்டு, "அம்மா! நான் உனக்கு எவ்வளவு வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் மனதில் என்ன உணர்கிறேனே அதை வெளிப்படுத்தவே சொற்கள் இல்லை என்றுதான் கூறவேண்டும். என் மகள் அவளுடைய கொடியதாயினின்றும் பிரிந்து நின்று தங்க இடமில்லாமல் அல்லலுற்ற அவளுக்கு அபயமளித்த உன்னை நான் போற்ருமலிருக்க முடியுமா?'' என்று புகழ்ந்து பேசினுள்.

கோமளம்:—மாதே! சென்றதைப்பற்றி இப்போது நாம் பேசவேண்டாம். நீ எவ்வளவுதூரம் மனத்துயரடைந்திருக்கிருய் என்பதை நான் அறிவேன். உன்னுடைய துக்க உடையே நீ துக்கக்கடலில் மூழ்கி யிருக்கிருய் என்பதைத் தெளிவாக்குகின்றது. நான் இப்போது என்னபேசினுலும் அதனுல் உன் துக்கம் அதிகரிக்குமே தவிர அது தீராது. ஆதலின் இப்போது பேசுவதில் பயனில்லை. ஆகவே நடந்துவிட்டதை மறந்துவிடுவோம். நீ என் அன்புள்ள மீனுவை உன்னுடன் இப்போதே அழைத்துக்கொண்டு போய்விடுகிருயா என்பதைத் தெரிவி.

மரகத:—எனதன்புள்ள கோமளம்! அப்படித்தான் செய்யலாமென யோசித்திருக்கிறேன். நீ நிதானமாக யோசித்துப்பார்த்தால் நான் செய்வது சரி என்பது உனக்கு விளங்கும். நானும் எனது குமாரியும் சேர்ந்து செய்ய வேண்டிய கடமை ஒன்று இருக்கிறதல்லவா? இன்னும் இரண்டு மூன்று தினங்களில் நானும் அவளும் இரத்

தினபுரிக்குப் புறப்படவேண்டும். அங்கிருந்து பரிதி புரத்துக்கும் செல்லவேண்டி யிருக்கிறது.

கோமளம்:—ஆம்; போகவேண்டியது. நீங்களிருவரும் போகவேண்டிய அவசியத்தை நான் உணர்ந்திருக் கிறேன். எப்போது புறப்படுவதாக உத்தேசித்திருக் கிருய்?

மரகத:—நான் என்மகளை உன்னிடமிருந்து ஒரு நிமிஷத் துக்குள் பிரித்துவிடத் தயாராக இல்லை. ஆதலின் இரண்டொரு நாட்களில் புறப்படுவேன். ஏனெனின் நீங்களிருவரும் சகோதரிகளைப்போல் ஒருவரையொரு வர் நேசிக்கிறீர்கள்.

கோம:—ஆம்; நாங்கள் இருவரும் சகோதரிகளைவிட அதிக மாகவே நேசிக்கின்ருேம். நீ இன்று முழுவதும் எங்க ளுடன் எங்கள்வீட்டில் தங்கமாட்டாயோ?

மரகத:—கோமளம்! நீ இருக்கும்படி கேட்டுக்கொண்ட பின் னரும் நான் அதை மறுக்கமுடியுமா? இன்று மாலை வரை உங்களுடனேயே இருப்பேன். ஆனல் மாலையில் நான் மீனும்பாளை அழைத்துக்கொண்டு போகவேண் டும். ஏனெனின், நாங்களிருவரும் பேசவேண்டிய விஷயம் பல இருக்குமல்லவா? நாங்கள் மறுபடியும் உன்னைக் காண்பதற்காக இங்கே வருவோம்.

கோம:—அப்படியானல் மாலை முன்னேரத்திலேயே போய் விடக்கூடாது. இரவு எவ்வளவுநேரம் இங்கு இருக்க முடியுமோ அவ்வளவுநேரம் இருந்துவிட்டே பிறகு போகவேண்டும். இரவு பத்துமணிவரை உங்களைவிட் டுப் பிரிய என்னல் முடியாது. பிறகு நான் உங்க ளுடன் ஓட்டலுக்கு வருவதற்காக ஒரு வேலைக்காரியை

அனுப்புகிறேன். மேலும் மீனம்பாளுக்கு வேண்டிய அவசியமான சாமான்களையும் எடுத்துக்கொள்ள வேண்டாமா!

மரகத:—அப்படியே ஆகட்டும் இன்று ஒருதினமாவது உன் இஷ்டப்படியே நடக்கவேண்டியதுதானே நியாயம். நீ கேட்டுக்கொள்கிறபடியே நடந்துகொள்வதில் ஆட்சேபமில்லை.

கோம:—இப்போது நானும் மீனம்பாளும் உன்னை எங்கள் வீட்டுக்குள் அழைத்துச் செல்கிறோம். வீடு மிக்க எளிமையானதே. ஆனல் நான் மிக்க ஆவலுடன் வரவேற்கிறேன் என்பதைமட்டும் மறக்கவேண்டாம். ஆகாரம் தயாராயிருக்கிறது. வாருங்கள் போவோம்.

பிறகு அந்த அழகிற்சிறந்த, இனிய குணவதிகளான அப்பெண்கள் இருவரும் மரகதவல்லியை அவ்வீட்டிற்குள் அழைத்துச் சென்றார்கள்.

முதலில் தாயும்மகளும் பிறகு அவர்களுடன் கோமளவல்லியும் பேசிக்கொண்டிருந்தபோது அக்கோமளவல்லியின் பால் தணியா மோகங்கொண்டு அவளை எப்படியாவது கெடுத்துவிட வேண்டுமென்னும் எண்ணத்துடன் அலையும் குரு சுகானந்தன் எங்கே இருந்தான் என்று நினைக்கிறீர்கள். அம்மூவரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்த இடத்துக்கருகில் ஒரு பெரிய மரத்தின் பின்னல் மறைந்து அவர்கள் பேசியதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தான். மரகதவல்லியும் அவளது குமாரி மீனம்பாளும் என்னபேசினர்கள் என்பது பற்றி அவனுக்குக் கவலையில்லை. ஆனல் அவனை ஒவ்வொரு நிமிஷமும் மோகமென்னும் ஆழ்ந்த சமுத்திரத்தில் ஆழ்த்திக் கொண்டேயிருந்தது யாதெனின், கோமளவல்லி பேசும்

போது அவன் காதில் விழுந்த அவளது குரல் தொனியே யாகும். அச்சமயத்தில் அத்தொனியைவிடச் சிறந்த சங்கீதமே இவ்வுலகில் இல்லையென்று அவன் கருதலானான். கோமளத்தின் பரிசுத்தமானதும் நீதியானதும், ஒழுங்கானது மான குணங்கள் வேறு எவரையேனும் நல்லவிதத்தில் திருப்பி யிருக்கும்; ஆனால் நமது சுகானந்தகுரு ஸ்வாமிகளுக்கோ, அவனது ஹிருதயத்தில் தீயை மூட்டிவிட்டதுபோல் காமத்தீ எரியலாயிற்று. அதை அணைத்துக்கொண்டு சமாதானமடைய அவனால் முடியவில்லை.

அவன் மறைவிலிருந்துகொண்டு அம்மூன்று பெண் மணிகளும் பேசியதையெல்லாம் கேட்டிருந்ததால் அன்று இரவு பத்து மணிக்குமேல் மாகதவல்லியும் அவளது குமாரி யும் கந்தபுரி ஓட்டலுக்குப் போய்விடுவதுடன் அவர்களோடு சேவகியும் போய்விடுவாளென்பதையும், அப்போது கோமளம் வீட்டில் தன்னந்தனியே இருப்பாளென்பதையும், சுந்தரம்மாள் பாரிசரோயால் பீடிக்கப்படுகிறபடியால் அவளைப் பற்றிக் கவலையில்லை என்பதையும் உணர்ந்துகொள்ளவே 'ஆ, இன்றிரவு நமது காரியத்தை முடித்துக்கொண்டு விடலாம்' என்னும் பேராவல் அவன் உள்ளத்தில் எழுந்தது. ஆகவே அவன் அவ்விடத்தை விட்டுப் புறப் பட்டான். நேரே மடாலயத்துக்குச் செல்லாமல் தான் அன்றிரவு அனுபவிக்கப் போகின்ற இன்பத்தைப்பற்றி யும், எப்படி அதை அடைவது என்பது பற்றியும் தனியே இருந்து சிந்திப்பதற்காக மீண்டும் ஒரு தோட் டத்துக்குச் சென்று தனியே இருந்து, "நான் என் அவ ளுக்காக எத்தகைய தியாகத்தையும் செய்யக்கூடாது' அவள் அழகை அனுபவிக்கக்கூடிய பாக்கியம் கிடைத்தால் அதற்காக உயிரைவிட்டாலும் பாதகமில்லையென்று பல முறை நானே கூறியிருக்கிறேனே. நான் அவளைக் கட்டாயப்

படுத்தி அவளது கன்னிகைப்பருவம் கழியும்படி செய்து விட்டால் அதை அவள் யாரிடம் சொல்லிக்கொள்ள முடியும்? ஆனால் அதை அடியோடு மறந்துவிடவும் முடியாது. மனத்திலேனும் உறுத்திக்கொண் டிருக்குமல்லவா? அவளுடைய காதலனாகிய ஜகதீசனிடமும் இதைச் சொல்லமுடியாது. ஆகவே அவள் வஞ்சனையுள்ளவளாக இருக்க நேரிடும். இப்படித்தானே மாதர்கள் ஒருநாள் இல்லாவிட்டாலும் மற்றொரு நாளிலாவது வஞ்சகமென்னும் ஆழ்கடலில் சிக்கிக்கொள்கின்றனர். சூதுவாது தெரியாத கோமளத்துக்கும் அதை அறியும்படியான அவசியத்தை நான் உண்டாக்கி விடுகிறேன்'' என்று தனக்குள் கூறிக்கொண்டான்.

பார்த்தீர்களா! அவனுடைய அயோக்கியத்தனத்தை. அவன் மாதர் உலகமே என்றைக்காயினும் ஒருநாள் வஞ்சகத்துள் இறங்கக்கூடியதே என்று தீர்மானித்துவிட்டான். மாதர்களுக்குள்ள கற்பு, அன்பு, இரக்கம் என்னும் சீரிய குணநலன்களைப்பற்றி அவன் ஒன்றும் அறியான். தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளும்பொருட்டு எத்தனையோ மாதர்கள் தங்கள் உயிரையும் திரணமாக மதித்து அதையும் இழந்திருப்பதுடன் இன்னமும் அப்படிப்பட்ட உத்தமிகள் எவ்வளவோபேர் இருக்கிறார்கள் என்பதை அவனறியவில்லை. அவன் தன் மனம்போலவே பிறர் மனமும் வஞ்சனையுள்ளதாயும், ஆபாசம் நிறைந்ததாயும் இருக்குமென்று நினைத்து விட்டான். அவன் தன் சொந்த அனுபவத்தில் சில பணக்கார குடும்பத்தைச்சேர்ந்த மாதர்கள் ஒழுக்கங்கெட்டுத்திரிவதைப் பார்த்துவிட்டதால் மாதர் உலகமே அப்படிப்பட்ட சுபாவமுடையதுதான் என்று நினைத்ததானது அவனது அறியாமையையே விளக்குகின்றது. அவன் அழகிய தோற்றமுடையவனாகவும், மடாதிபதி என்னும் உயரிய பதவியுடை

யவனும் இருந்தால் சிலரை ஏமாற்றிப் பாழ்படுத்த அவனுக்குச் சௌகரிய மேற்பட்டிருக்கலாம். அதனால் உலகமே அப்படித்தான் இருக்குமென முடிவுகட்டிவிடுவது முட்டாள் தனமல்லவா? மேலும் தான் பலாத்காரமாகக் கோமளவல்லியை அனுபவித்துவிட்டால் அதை அவள் தன் காதலனாகிய ஜகதீசனிடம் சொல்லமாட்டாளென நினைத்ததும் தவறு. முதல்முறை சுகானந்தன் அவளை ஹிம்சித்ததை அவள் அதைத் தன் காதலனிடம் ஒளி மறைவின்றி நடந்ததையெல்லாம் அப்படியே கூறிக்கொண்டு விடவில்லையா? அவன் அவளை மானபங்கப் படுத்திவிட்டால் அதை அவள் தன் காதலனிடம் சொல்லிக்கொண்டால் அதனாலேயே அவளுடைய காதலன் அவளை விட்டுவிடுவான் என அவள் அஞ்சமாட்டாள். விவரமாகச் சொல்லிக்கொண்டுதான் அழுவாள். அதனால் அக்காதலனுக்கு அவளிடம் அதிகமான அனுதாபமும், இக்கொடியோனிடம் அதிகமான ஆத்திரமும் ஏற்படும். ஆகவே பரிசுத்த கோமளத்தைப்பற்றிச் சுகானந்தன் நினைத்த எண்ணம் முற்றிலும் தவறானதே.

சுகானந்த ஸ்வாமிகள் இவ்வாறு கெட்ட எண்ணங்களையெல்லாம் சிந்தித்துக்கொண்டேயிருந்தபோது அத்தோட்டத்தில் யாருமில்லையென நினைத்துச் சிறிதும் அச்சமின்றி நினைத்தவைகளையெல்லாம் வாயினாலும் உரக்கக்கூவினான். அவ்வாறு அவன் கூறி முடிந்ததும் அருகிலிருந்த அடர்த்தியான மரப்புதரிலிருந்து லீலாவதி என்னும் கருப்பு உடை அணிந்த மாது வெளிப்பட்டு அவன் முன்வந்து நின்றாள். அவளைக்கண்டதும் அவனுக்கு வெறுப்பும், ஆத்திரமும், கோபமும் அதிகரித்துவிட்டது. அவள், தான் கூவியவற்றையெல்லாம் கேட்டுவிட்டிருப்பாளே என்றும் அஞ்சினான். ஆகவே, "நீயா இங்கே இருக்கிறாய். நீ என் நடத்தை

களையெல்லாம் கவனித்துக்கொண் டிருக்கிருய்போலும்" என்று ஆத்திரத்துடன் கேட்டான்.

அதற்கு லீலாவதி, "ஆம்; உன்னையே அழித்துவிடக் கூடிய ஒரு கொடிய செயலில் நீ இறங்கிவிடாதபடி உன்னைத் தடுக்கவே நான் இவ்வாறு உன் பின்னலேயே இருந்து கொண்டு உன் நடத்தைகளைக் கவனித்து வருகிறேன்." என்று நிதானமாகவும் உறுதியுடனும் ஆனல் துக்கத்துடனும் கூறினள்.

சுகானந்:—என்ன கொடிய குற்றம்! நான் என்னகுற்றம் செய்யப்போவதாக நீ நினைத்துக்கொண்டிருக்கிருய். நீ என்ன தைரியத்துடன் இவ்வாறெல்லாம் என் எதிரில் பேசுகிருய்.

லீலாவதி:—நீ உன் ஆசையை அடக்கமுடியாமல் கத்திய விஷயத்தை நான் கேட்டேன். அந்தக் கள்ளங்கபடமற்ற சிறுமி கோமளவல்லியைக் கெடுக்கவல்லவா நீ பார்க்கிருய். அவளிடம் உனக்குக் காதல் அதிகரித்துவிட்டிருக்கிறது. சீ; காதல் அல்ல. ஏன் அந்த பரிசுத்தமான சொல்லை உன்விஷயத்தில் உபயோகிக்க வேண்டும். காதல் அல்ல. காமத்தீயால் அல்லவோ நீ தகிக்கப்பட்டிருக்கிருய்.

சுகானந்:—நான் அவளைக் கெடுக்க வேண்டுமென்னும் தீய எண்ணமுடையவனென்று எப்படிச் சொல்ல முடியும். அவசரப்பட்டு ஒன்றும் கூறிவிடவேண்டாம்.

லீலாவதி:—முடியாது. உன் எண்ணத்தை மறைக்க முயல வேண்டாம். தீய எண்ணத்துடன் இல்லையென்று சொல்ல உன்னல் முடியாது.

சுகானந்:—அப்படியே இருப்பதாக வைத்துக்கொண்டாலும் என் நடத்தைக்காக உன்னிடம் பதிலும் சமாதானமும் சொல்லிக்கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை.

லீலாவதி:—நீ சமாதானம் சொல்லவேண்டியது அவசியமில்லையென்றாலும் அதுபோலவே அப்பெண்ணை ஆபத்துக்குள்ளாகாதபடி காப்பாற்ற எனக்குள்ள உரிமையைத்தடுக்க உன்னால் முடியாது.

சுகானந்:—லீலாவதி நீ ஏன் என்விஷயத்தில் இவ்வாறு தலையிடுகிறாய்? நீ செய்யும் காரியத்ததால் எனக்குக்கோபம் அதிகரிக்கிறது. பிறகு நான் உன்னைத் தொந்திரவு செய்யவேண்டியதாய் இருக்கும். நீ என் பாதுகாப்பில் இருக்கிறாய் என்பதை அடியோடு மறந்துவிடுவதன் காரணம்தான் என்ன?

லீலாவதி:—உன் பாதுகாப்பிலா நான் இருக்கிறேன். நான் சாப்பிடும் ஒருகவளம் அன்னத்துக்காக நான் உன் பாதுகாப்பில் இருப்பதாக நீ கூறுவது சரியா? உலகத்திலுள்ள பொருள்களையெல்லாம் நீ எனக்குக் கொடுப்பதாக வைத்துக்கொண்டாலும் நீ எனக்குச் செய்த துரோகத்துக்கு ஈடாகுமா? எனக்கு எவ்வளவோ நம்பிக்கைகளையெல்லாம் உண்டாக்கிப் பின்னர் கெடுத்துவிட்டாயே. என்னை மிகவும் நேசிப்பது போல் பாவனைகாட்டி ஏமாற்றி விட்டாயே. நான்மட்டும் உன்னை நேசிப்பது உண்மையென்றாலும் சிற்சில சமயங்களில் உன் காரியங்களைப்பற்றி நினைக்கும்போது எவ்வளவு வெறுப்பு உண்டாகிறது தெரியுமா? அப்படிப்பட்ட சமயங்களில் என் பழியைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்னும் எண்ணமும் உண்டாகிறது. உன்னிடமுள்ள அன்பு தானாக மறைகிறது.

நீ ஏன் என் வெறுப்பும் துவேஷமும் அதிகரிக்கும்படி நடந்துகொள்கிருய். என் வாழ்க்கையை எவ்வளவு தூரம் நீ கெடுத்துவிட்டாய் என்பதை நீ யோசித்தால் என் இஷ்டப்படி நீ நடக்கவேண்டுமென்பதை உணர்வாய். எனக்கு நீ இழைத்த கொடுமைகளைப்போல் வேறு எந்த மாதுக்கேனும் இழைத்திருந்தால் அவள் உன்னை எப்போதோ பழி வாங்கிவிட்டிருப்பாள். ஆகவே ஜாக்கிரதை!

இவ்வாறு லீலாவதி கூறும்போது ஆவேசம் வந்தவள் போல் அதிக உறுதியுடனும் தைரியத்துடனும் காணப்பட்டாள். ஆகவே சுகானந்தனும் சிறிது அஞ்சினுன். எனவே அவன் சிறிதுநேரம் அசையமுடியாமலும் பேசமுடியாமலும் நின்றிருந்து அவளையே உற்று நோக்கிக்கொண்டிருந்தான். அப்போது அவள் மறுபடியும் பின்வருமாறு சிறிது உக்கிரக் குறலுடன் பேசலானுள்:—

''ஓ! நீ என்னைக்கண்டு அஞ்சுகிருய்; சுகானந்தா! நான் உன்னை நன்கு அறிவேன். உன் கொடிய ஹிருதயம் எவ்வளவு கெட்டது என்பதை நான் அறிந்திருந்தும் உன்னை நேசிக்கிறேன் என்ருல் என் அன்பு எவ்வளவு சிறந்ததாக இருக்கவேண்டுமென்பதை நீயே யோசித்துப்பார். நீ எனக்கு ஏதோ கொஞ்சம் ஆகாரத்துக்குப் பணம் அளிக்கிருய் என்ருல் அது என்னிடம் உனக்குள்ள அன்புக்காக அளிக்கப்படுவதல்ல, என்னிடமுள்ள அச்சத்தாலேயே அளிக்கிருய். நான் ஏதோ உன் காரியங்களைக் கெடுத்துவிடுபவள் என்று கூறினுயே. நான் இல்லாவிட்டாலல்லவோ உன் சங்கதி தெரிந்திருக்கும். உன்னைத் தூக்குமேடைக்கு அனுப்பக் கூடிய குற்றத்தை நீ செய்வதினின்றும் உன்னை நான் தடுக்கவில்லையா? கள்ளங் கபடமற்ற உத்தமகுணமுடைய அப்

பெண்ணைக் கெடுக்க அல்லவோ நீ முயற்சிக்கிறாய். கோமளத்தைப்பற்றிப் பேசினாயே. அவளை நீ தொந்தரைக் குள்ளாக்கியபோது நான் தலையிட்டு அவளை விடுவித்ததும், இதைப்பற்றி வெளியில் பிரஸ்தாபிக்க வேண்டாமென்று நான் உன் சார்பாக அவளைக் கேட்டுக்கொண்டதும், எமது கோரிக்கைக்கு இணங்கி அவளும் சும்மா இருந்ததும் உனக்கு மறந்துவிட்டதோ? அவள் வெளியில் சொல்லிவிட்டிருந்தால் இந்த மடத்தில் உனக்குள்ள கௌரவமான தொழிலும்போய், கோர்ட்டிலும் அல்லவோ அகப்பட்டுக் கொண்டிருப்பாய். உன்னை இப்படிப்பட்ட சங்கடங்களினின்றும் காப்பாற்றிய தற்காக நீ என்னைக் கெட்டவள் என்று கூறுகிறாய். நான் உனக்கு நன்மையே செய்திருக்கிறேன். இப்போதும் நன்மையே செய்ய வந்திருக்கிறேன். நீ கோமளத்தைத் தொடுவாயாயின் அத்துடன் நீ உன் அழிவுக்கே வழி தேடிக்கொண்டாய்விட்டது என்று நினைத்துக்கொள். இவ்வாறு நான் கூறுவதற்காக நீ எனக்கு ஆகாரத்துக்காக அளிக்கும் சிறு தொகையை நிறுத்திக்கொள்வதாக பயமுறுத்துகிறாயே. அது நீதியா? அதற்கெல்லாம் நான் அஞ்சேன். நீ எனக்கு அவ்வாறு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறாய் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்.

அப்போது சுகானந்தன் ஒருவாறு தன் ஆத்திரத்தையும் கோபத்தையும் அடக்கிக்கொண்டு "லீலாவதி! உனக்குக் கோபமூட்ட நான் விரும்பவில்லை. அதுமட்டுமல்ல. இப்படிப்பட்ட மனஸ்தாபத்தைத் தரக்கூடிய பேச்சுகளையே நாம் பேசலாகாது. நீ உன் மனதிலுள்ளவைகளையெல்லாம் பகிரங்கமாகச் சொல்லிவிட்டதாலும், நாம இப்போது பரஸ்பரம் இருக்கும் நிலைமையை இருவரும் அறிவதாலும் இச்சமயத்தில் நான் ஒருவிஷயத்தை உனக்குத் தெரிவித்துக் கொள்

கிறேன். அதாவது இனியேனும் என் விஷயத்திலும் என் முயற்சிகளிலும் நீ தலையிடலாகாதென்பதே. நானும் உன் விஷயத்தில் தலையிடுவதை நீண்டகாலமாகவே விட்டுவிட்டேன்'' என்று ஏதோ கூறி முடிக்க நினைத்தான்.

லீலா:—ஆம்; நீ என்விஷயத்தில் தலையிடவில்லையென்றால் அதற்குக்காரணம் நீ ஈவு இரக்க மற்றவனும், என் க்ஷேமத்தில் அக்கரையில்லாதவனுயு மிருப்பதேயாகும். ஆனால் நானோ சென்ற இருபது வருஷங்களாக உன்னிடமிருந்து எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்தாலும் உன்னை மனமார நேசித்தே வருகிறேன்.

சுகானந்:—அப்படியானால் அந்த அன்பு காரணமாகத்தான் இப்படி என்னைத் தொந்திரவு செய்கிறாய்போலும் என் பின்னாலேயே சுற்றித்திரிவது, நான் எங்கே என்செய்கிறேன் என்பதைக் கவனிப்பது, என் விஷயங்களில் தலையிடுவது இதற்கெல்லாம் அந்த அன்புதான் காரணமா? அப்படியானால் அவ்வாறு என்னை நேசிப்பதை அறவே விட்டுவிடு.

லீலா:—ஓ, அப்படிச் சொல்லாதே; அது ஒருகாலும் முடியாது. எனக்கு உன்னிடமுள்ள நேசத்தை மறக்க என்னால் முடியவே முடியாது. அந்த அன்பு காரணமாக என் வாழ்க்கையே அழிந்துவிட்டதே. இப்போது அதை எப்படி விட்டுவிடமுடியும்? அன்பை விடுவதென்றால் அது வெறுப்பாகவும் துவேஷமாகவும்தான் மாறும். பிறகு என்ன ஆபத்து நேருமோ யார் அறிவார்? ஆதலின் அப்படிச் சொல்லவேண்டாம்.

சுகானந்:—அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. உன் பேச்சுகளெல்லாம் எனக்கு வெறுப்பை உண்டாக்குகிறது. அன்பாவது? நேசமாவது? நம்மிருவரிடையே

அப்படிப்பட்ட சம்பந்தமெல்லாம் ஒன்றும் இருக்க வேண்டிய அவசியமில்லை. பல வருஷங்களுக்கு முன்னரே நம்மிடையேயுள்ள சம்பந்தம் ஒழிந்துவிட்டது. பொறாமையினாலும் ஏமாற்றத்தாலும்தான் நீ இன்னமும் என்பின்னால் திரிந்துகொண்டு என் விஷயத்தையெல்லாம் கெடுத்து விடுகிறாய். இதனால் எனக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆதலின் இனியும் நான் சகித்துக்கொண்டிருக்க முடியாது. ஆகவே உன்னுடைய மேற்பார்வையை இன்றுடன் தொலைத்து விடுவதென நிச்சயப்படுத்தி யிருக்கிறேன். இப்படிப்பட்ட நெருக்கடியான நிலைமையை நீயே உண்டாக்கினாய். என்னை இனியும் பயமுறுத்திக்கொண்டிருக்க உன்னால் முடியாது. இந்த நிமிஷம்முதல் நமது சம்பந்தம் அறுபடட்டும். நீ என்ன தீங்கு வேண்டுமாயினும் இழைக்கலாம். நான் அதை எதிர்த்தே நிற்பேன். என்னைப் பற்றி நீ எதுசொன்னாலும் அதில் நீயும் சம்பந்தப்பட்டிருக்கிறாய் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள். அடுத்தமுறை நீ என்விஷயத்தில் தலையிட்டால் உன்னை நான் ஹிம்சிப்பேன் என்பது நிச்சயம். உன் ஆகாரத்துக்காகக் கொடுக்கப்படும் சிறு பொருளுதவிமட்டும் முறைப்படி கொடுக்கப்பட்டு வரும்.

லீலா:—அப்படியா! போதும் உன்பேச்சை நிறுத்திக்கொள். இவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்டாயா? எனக்கா நீ துன்பத்தை விளைவிக்கப்போகிறாய்! அவ்வாறாயின் பார்த்துக்கொள்வோம். இனி இந்த நிமிஷம்முதல் என் அன்பு பூரண துவேஷமாக மாறிவிட்டதென்றே நினைத்துக்கொள். இந்த துவேஷத்தால் ஏற்படக்கூடிய பலனை அனுபவிக்க நீ தயாராக இருக்கவேண்டியது

தான். உனக்காக எவ்வளவோ தாங்கமுடியாத துயரங்களையெல்லாம் சகித்துக்கொண்டிருந்து அதனால் புண்பட்ட மனத்தினின்றும் கிளம்பும் துவேஷமே இனி உன்னைத்தாக்கும் என்பதை மறவாதே. நீ ஏதோ சிறு பொருளுதவிசெய்வதாகச் சொன்னாயே. அதைப்பற்றி நான் கவலைப்படமாட்டேன். அது எனக்கு வேண்டவே வேண்டாம். அதைப்பெறவும் நான் வெறுக்கிறேன். உன்னிடமிருந்து ஏதேனும் பெறச்சம்மதிப்பதைவிடத் துறவியாய்த் தெருவில் அலைந்து பிச்சை ஏற்கத் தயாராய் இருப்பேன். ஆ! நெருக்கடி உண்மையிலேயே ஏற்பட்டுவிட்டது. சுகானந்தா! உனக்கு இறுதி வந்தனம். விடைபெற்றுக் கொள்கிறேன். நாம் மற்றும் ஒருமுறை சந்திப்போம். ஆனால் அன்பினால் தூண்டப்பட்டு உன் எதிரில் நிற்கமாட்டேன். என் உள்ளத்தினின்றும் கொழுந்துவிட்டெரியும் துவேஷம் என்னும் தீயின் காரணமாக உன்னைப் பழிவாங்கவே உன் எதிரில்வந்து நிற்பேன். ஜாக்கிரதை.

இவ்வாறு கூறிக்கொண்டே லீலாவதி சுகானந்தனை விட்டுப் பிரிந்து சென்று தோட்டத்தில் மறைந்து எங்கேயோ போய்விட்டாள். சிறிதுநேரம் சுகானந்தன் திக்பிரமையுடன் அவள் சென்ற திக்கையே நோக்கிக்கொண்டு நின்றிருந்தான். அவளை மறுபடியும் பெயர்சொல்லி அழைக்கலாமா என்றும் நினைத்தான். ஏனெனின் அவன் உண்மையிலேயே அவளிடம் அச்சம் கொண்டான். தான் அளவுகடந்து போய் விட்டதாக நினைத்தான். அவளுக்கு அதிக கோபத்தையும் தானே உண்டாக்கிவிட்டதாக அறிந்தான். ஆனால், அவனுக்குள்ள கர்வத்தின் காரணமாக அவளைக் கூப்பிட அவன் மனம் துணியவில்லை. பிறகு சற்றுநேரம் கழித்து

அவன் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான். அப்போது தன் மனத்தினுள், "சரி! எல்லாம் நன்மைக்கே ஏற்படுகிறது. அவள் தனியாக இருக்கும்போதேனும் சிந்தித்துப் பார்த்து சமாதானமடைவாள். அவள் என்னிடம் முட்டாள்தன மாகவேனும் அன்புடையவளாக இருப்பதால் எத்தகைய துன்பத்தையும் எனக்கு விளைவிக்க அவள் மனம் துணியாள். அவளைப்பற்றிச் சிந்திப்பதையும் விட்டுவிட்டு இன்று இரவு நான் அடைந்து ஆனந்தம் அனுபவிக்கப்போகும் அந்த அழகிற்சிறந்த காரிகை கோமளத்தைப்பற்றி நினைப்பேனாக" என்று நினைத்துக்கொண்டான்.

நேயர்காள்! நல்லெண்ணத்துடன் கூடிய அன்பும் ஒரு காலத்தில் துவேஷமாகவும் வெறுப்பாகவும் மாறிவிடுகிறதென் பதற்கு நமது லீலாவதியே உதாரணமாக நிற்கின்றாள். லீலா வதி சுகானந்தனுடைய மயக்கு வார்த்தைகளுக்குக் கட்டுப் பட்டு தன் மானத்தையும் விற்று சகோதரிகளையும் விட்டு அவனுடன் போய்விட்டதில் அவள் அடைந்த லாபமென்ன? ஆயுள் முழுதும் துக்கமும் கவலையுமே. ஆடவர்கள், பெண் கள் அழகையும் யௌவனத்தையும் கண்டு மோகித்து ஏதேதோ சொல்லி ஏமாற்றி அவர்களைத் தங்கள் வழிக்குக் கொண்டு வந்துவிடுகிறார்கள். மாதர்கள் எவ்வளவுதான் கற் றுத் தேர்ந்தவர்களாயினும், மனோ உறுதி யுடையவர்களாயி னும், பெண் மக்களுக்கென இயற்கையாகவுள்ள சுபாவத் தால் அவர்கள் அபலைகளாய் ஆடவர்களின் தந்திரங்களுக் குட்பட்டுவிடுகின்றனர். ஆடவர்களோ தங்கள் மனம்போன படியெல்லாம் அவர்களுடைய இன்பத்தினை நுகர்ந்துவிட்டு அவர்கள் சிறிது வயது தளர்ச்சி யடையும்போது அவர்களைக் கைவிட்டு வேறு மங்கையர்மீது திருஷ்டி போடுகின்றனர். அவர்களிடம் அகப்பட்டுக்கொண்ட அப்பெண்மணிகளோ லீலாவதியைப்போல் திண்டாடுகின்றனர். உண்மையில் மாதர்

கள் ஆடவர்களை நேசிக்கின்றனர். ஆனால் என்செய்வது? ஆடவர்கள் வேறு பெண்களிடம் நாட்டம் செலுத்தும் போது பெண்களுக்குத் துக்கமும் கவலையும் ஏற்பட்டு அது நாளடைவில் வெறுப்பாகவும் துவேஷமாகவும் மாறிவிடுகின்றது. பழிக்குப்பழி வாங்கவும் நினைத்துவிடுகிறார்கள். மாதர்கள் இயற்கையிலேயே சாகசபுத்தி யுடையவர்களாதலால் தாங்கள் நினைக்கிறபடி காரியத்தையும் முடித்துவிடுகின்றனர். இத்தகைய சந்தர்ப்பங்களில் பெண்கள்மீது குற்றம் சுமத்துவதில் பயனில்லை. அவர்களை மயக்கி குடும்பத்தை விட்டு வெளியேற்றிய ஆடவர்கள், வாழ்விலும் தாழ்விலும் இன்பத்திலும் துன்பத்திலும் அவர்களை ஆயுள் பூராவும் ஆதரித்து அணைக்கவேண்டும். அப்படிச்செய்யப் பலர் தவறி விடுவதனால்தான் மணமுடித்தல் என்னும் மணச்சடங்கு அவசியமென நமது பெரியோர்கள் விதி பிறப்பித்தனர். காதல் மணம் என்று சொல்லிக்கொண்டு மாதரும் ஆடவரும் நினைத்தபோதெல்லாம் சதிபதிகளை மாற்றிக்கொள்வதென்றால் அது ஒழுக்கத்துக்கு நேர் விரோதமானதாகும். ஆகவே மாது சிரோமணிகள் தங்களுக்குத் தெரியாத ஆடவர்கள் எவ்வளவுதான் மயக்கு வார்த்தைகளைக் கூறினாலும் அதற்கெல்லாம் உடன்பட்டுவிடலாகாது. அவர்களுடைய பூர்வோத்திரங்களையெல்லாம் அறிந்துகொண்டு பலரறிய மணம் செய்து கொண்டாலொழிய அவர்கள்பால் நேசங்கொள்ளலாகாது. ஆடவர்களும் தங்களை நம்பிவந்த அபலைகளை இறுதி வரை காப்பாற்றாமல் பல ரகங்களை மாதிரி பார்த்துக்கொண்டிருந்தால் உலக பழிக்கு ஆளாவார்கள்.

162 - வது அத்தியாயம்

லீலாவதியைத் தோட்டத்தில் விட்டுப் பிரிந்த சுகானந்தன் நேராகத் தன் மடத்துக்குச்சென்று இரவு மணி ஒன்பது எப்போது வருமென மிக ஆவலுடன் காத்திருந்தான். அப்படியே மணியும் ஒன்பது அடிக்கும் சமயமானதும் தன் மடத்தைவிட்டுப் புறப்பட்டுத் தான் பிரமாதமான வெற்றி யடையப்போவதாகவும், அதற்காகச் சொல்லொணுத் தீமையைச் செய்வதென்றும் நினைத்துக்கொண்டு கோமளவல்லியிருக்கும் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான். நடக்கும் அவன் தைரியமாகச் சாசரவென்று நடக்கவில்லை. ஏன்? அவன் உள்ளத்தில் ஒருவித அச்சம் இருந்துகொண்டே இருந்தது. தான் கோமளவல்லியினிடம் இன்பத்தை அனுபவிக்க விரும்புவதை அறிந்திருப்பவளும், அதைத் தடுக்க முயற்சிப்பவளுமான லீலாவதி எங்கே தன்னைப் பின்தொடர்ந்து வந்து தன் இன்பத்தைத் தடுத்துவிடுகின்றாளோ. என்னும் பீதியால் அடிக்கடி நாலாபக்கங்களிலும் திரும்பிப் பார்த்துக்கொண்டே நடந்தான். அப்படிப் பார்த்ததில் தான் அஞ்சுகிறபடி அவள் வரவில்லையென்று நிச்சயமாகத் தெரிந்தபடியால் சிறிது தைரியத்துடனும் நம்பிக்கையுடனும் நடந்தான். அவன் அன்றுமாலை மதுபானம் செய்திருந்ததால் அவனுக்கு ஒருவித துணிச்சலும் ஏற்பட்டது. அம்மயக்கத்தில் அவன், தான் வெற்றியடையப்போவது நிச்சயமென நினைத்து எந்த எந்த வகையிலெல்லாம் கோமளவல்லியிடமிருந்து இன்பத்தை நுகருவதென மனோராஜ்யம் செய்துகொண்டான். அப்படி வெற்றியடைய முடியவில்லையென்றால் எத்தகைய தியாகத்தையும் செய்து வெற்றிக்கு முயற்

சிப்பதென்றும், அதனால் என்ன கஷ்டங்கள் வந்தாலும் அனுபவிப்பதென்றும் முடிவு செய்தான்.

இவ்வாறு நினைத்துக்கொண்டே சுகானந்தன் சுமார் ஒன்பதரைமணிக்குக் கோமளவல்லியின் இல்லத்துக்கு அருகில் வந்து அதைச்சேர்ந்த தோட்டத்தின் சுற்றுப்புற சுவர் ஓரத்தில் ஒரு அடர்ந்த மரத்தினடியில் நின்று அவ்வீட்டில் என்ன நடக்கிறதென்பதைக் கவனித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு அரைமணிநேர சாவகாசமிருந்ததால் அவன் பல விதமான விஷயங்களைப்பற்றிச் சிந்தித்து தான் செய்வது தவறு என்பதை அறிந்து தன்னைத் திருத்திக்கொண்டிருக்கலாம். ஆனால் அவன் மோகமென்னும் மயக்கத்தில் இருக்கிறானே. அவனுக்கு நல்ல சிந்தனைகள் மனதில் உதிக்குமா? அவன் அந்தநேரத்திலும் தான் இன்னும் சற்றுநேரத்துக்குள் அனுபவிக்கப்போவதாக எண்ணிய இன்பங்களைப்பற்றியே கனவு கண்டுகொண்டிருந்தான். ஆகவே அவன் தன் தீய சிந்தனையினின்றும் விலக முடியவில்லை. அச்சமயத்தில் பக்கத்திலிருந்த மாதா கோயில் கடிகாரத்திலும் மணி பத்து அடித்தது உடனே அவன், "ஆ! எதிர்பார்த்தவேளை வந்துவிட்டது" என்று ஆவலுடன் கூறினான்.

கடிகாரத்தில் மணி பத்து அடித்ததும் கோமளவல்லியின் வீட்டு முன்வாயில் கதவு திறக்கப்பட்டது. இளங்கன்னியர்கள் பேசும் இனிய சத்தம் அருகில் பதுங்கியிருந்த சுகானந்தனின் காதில் கேட்டது. கோமளவல்லியும், மீனம்பாளும் பரஸ்பரம் விடைபெற்றுக் கொண்டார்கள். பிறகு மரகதவல்லியும் கோமளத்தினிடம் ஏதோ கூறினாள். அதன் பின்னர் கோமளம் தன் வேலைக்காரியிடம், அவ்விருவரையும் கந்தபுரியிலுள்ள பௌண்டன் ஓட்டலில் கொண்டுபோய் விட்டு விட்டு விரைவில் வரும்படி கட்டளையிட்டதும் மகா

பாவியாகிய சுகானந்தன் செவியில் ஏறியது. உடனே மா கதவல்லி, மீனும்பாள், வேலைக்காரி ஆகிய மூவரும் வெளியில் வந்ததையும் அவன் கண்டான். பிறகு அவர்கள் அங்கிருந்து புறப்பட்டுக் கந்தபுரி ஓட்டலை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள். கோமளவல்லிமட்டும் மெதுவாக வீட்டினுள் புகுந்தாள். பல மாதங்களாகத் தன்னுடன் இருந்த ஒரு தோழி தன்னைவிட்டுப் பிரிந்ததைப்பற்றி மிக வருத்தப் படுகிருள் என்பது அவளுடைய நடையாலேயே தெரிந்தது.

முன்வாயிலின் கதவு மூடப்பட்ட சத்தமும் சுகானந்தனுக்குக்கேட்டது. தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்த வேளை வந்துவிட்டது என்பதை நினைத்தமாத்திரத்தில் ஒரு வித புத்துணர்ச்சி அவன் மனதில் தோன்றியது. ஆனால் உடனே அவன் அவ்விடத்தைவிட்டு வெளிப்படாமல் கோமளம் என்னசெய்கிருள் என்பதைக் கவனிப்பதற்காக அங்கேயே நின்றிருந்து கவனித்துக்கொண்டிருந்தான்.

அந்தவீட்டின் மாடிமீதுள்ள ஒரு அறையில் ஒரு விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அதன் ஜன்னல் வழியாகப் பிரகாசம் தெரிந்தது. அந்த அறையில் தான் கோமளவல்லியின் அத்தை படுத்திருக்கவேண்டும் என்று சுகானந்தன் தெரிந்துகொண்டான். மாடியின்கீழ் ஒரு அறையிலும் விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்தது. ஆனால் கோமளவல்லி வீட்டினுள் புகுந்ததும் அந்த விளக்கு அணைக்கப்பட்டது. பிறகு சொற்பநேரத்துக்குள் மாடியின்மீது அத்தையின் அறை என்று அவன் கருதிய அறைக்குப் பக்கத்திலுள்ள அறை ஒன்றில் ஒரு விளக்கு ஏற்றப்பட்டது. அதன் வெளிச்சம் அவ்வறையின் ஜன்னலுக்குப் போடப்பட்டிருந்த திரையின் வழியே தெரிந்தது. அப்போது அவன் தன் மனதினுள்ளேயே, 'ஓ, அதுதான் கோமளவல்லியின் அறை.

அங்குதான் நான் இப்போது செல்லவேண்டும்' என்று நினைத்துக்கொண்டான்.

உடனே சுகானந்தன், தான் மறைந்திருந்த அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு வெளியில்வந்து கோமளவல்லியின் வீட்டுவாயிலின் அருகில் வந்ததும் சற்று நின்று நாற்புறமும் பார்த்தான். எங்கே தன் எதிரியும், இப்படிப்பட்ட காரியத்தில் குறுக்கிட்டு அதைக் கெடுப்பவளுமான லீலாவதி வந்துவிடுவாளோ என்னும் அச்சத்தால்தான் அவன் அவ்வாறு பார்த்தான். ஆனால் யாரும் தன்னைப் பின்தொடர்ந்து வரவில்லை என்பது தெரிந்ததும் தைரியமடைந்தான். முதலில் அவன் வாயிற்கதவைத் தட்டிக்கூப்பிட்டால் அந்த வீட்டுக்குள்ள ஒரே வேலைக்காரியும் வெளியே போய்விட்டதால் கோமளமே வந்து கதவைத் திறப்பாளென்றும் அப்போது உள்ளே புகுந்துகொண்டு மாடிமீது ஏறுமலே தன் காரியத்தை முடித்துக் கொள்ளலாமென்று கருதினன். பிறகு கதவைத்தட்டாமலே வேறு ரகசியவழியாக நேரே மாடிக்கே போகமுடியுமானல் திடீரென்று அவள் முன்னிலையில் நின்றால் அவள் அச்சப்பட்டு வேறு விதியில்லையெனத் தன் இஷ்டத்துக்கு இணங்கி விடுவாள் என்றும் நினைத்து இரண்டாவதாக நினைத்ததே சரியென்று தோன்றியதால் வீட்டைச் சுற்றிலுமுள்ள தோட்டத்தில் நாற்புறங்களிலும் சென்று உள்ளே நுழைய வேறுவழி இருக்கிறதா எனப் பார்த்தான். தெய்வாதீனமாகப் பின்புறத்தில் சமையல் அறையின் பின்புறக்கதவு தாளிடாமல் மூடப்பட்டிருந்ததைக்கண்டான். அவனுக்கு ஆனந்தம் அளவு கடந்துவிட்டது. உடனே அதைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான். அங்கிருந்து அவன் மாடிக்குச் செல்லக்கூடிய படிக்கட்டுகளின் அருகில் சென்று நின்றான். அவன் சிறிதுநேரம் அங்கேயே

நின்றுகொண்டு மாடிமீது என்ன நடக்கிறதென்பதைக் கவனித்தான்.

மேலே மாடிமீது யாரோ மெதுவாக நடப்பதுபோல அவனுக்குத் தெரிந்தது. அப்போது அவன், "அவள் தன் வேலைக்காரி வருகிறவரையில் அத்தையின் அறையில் இருக்கலாமெனப் போகிருள்போலும்! இல்லை. தன் அத்தை என்னசெய்கிருள் என்பதைக் கவனிக்கவேபோனுள். இதோ அவள் தன் அறைக்குத் திரும்பிவரும் சத்தம் கேட்கிறதே" என்று பலவாறு தன் மனதில் நினைத்துக்கொண்டான்.

உடனே அவன் தன் காலில் அணிந்திருந்த பாதரட்சையைக் கழற்றிவிட்டு ஒரு பூனையைப்போல் மெதுவாக சத்தம் உண்டாகாதபடி மாடிமீது படிக்கட்டுகளின் வழியே ஏறிச்சென்றுன். அதிசாமர்த்தியம் வாய்ந்த திருடனைப்போல் சிறு சத்தமும் உண்டாகாதபடி அவன் மாடிமீது ஏறிவிட்டான். ஆனுல் அங்கே அவனுக்கு ஒருசங்கடம் ஏற்பட்டது. மாடியின் மேல்வாயிலில் போய்நின்றதும் அங்கு இரு அறைகள் ஒன்றுக்கொன்று எதிர் எதிரில் இருப்பதையும், இரண்டிலும் சிறு விளக்குகள் எரிந்துகொண்டிருப்பதையும் கண்டான். அவற்றுள் கோமளவல்லியின் அறை எது என்று அவனுல் அறிய முடியவில்லை. கீழே தோட்டத்தில் மறைந்திருந்தபோது அவன் வைத்துக்கொண்ட குறிப்பு மேலே ஏறியபோது பயன்தாவில்லை. ஆகவே அவன் மெய் நடுங்க மீண்டும் இறங்கிப் போய்விடலாமா என்று நினைத்தான். ஆனுல் ஆசை வெட்கத்தையோ பயத்தையோ அறியாதல்லவா? அதிலும் பெண்மோகத்தில் சிக்கிக்கொண்டுள்ள அவன் நிதானபுத்தி இழப்பதில் ஆச்சர்யமென்ன இருக்கிறது. எப்படியாவது கோமளவல்லியின் இன்பத்தை நுகர்ந்தே தீருவது என்னும் ஆசை அவனைப் பிடர்பிடித்துத்

தள்ளியதால் அவனுக்குக் கீழே இறங்கிச்செல்ல மனம் வரவில்லை. அவன் இரு அறைகளின் கதவுகளுக்குள்ள சிறு சந்தின் வழியே உற்று நோக்கியதில் இடதுபக்கத்திலுள்ள அறையில் சிறு விளக்கின் மங்கலான வெளிச்சத்தில் தான் எந்தப்பெண்ணை இறுகத்தழுவி ஆலிங்கனம் செய்து கொண்டு மனமாற இன்பமனுபவிக்க ஆவல் கொண்டானே அப்பெண் இருப்பதைக்கண்டான். அவனுடைய காமத் தீயில் நெய்விட்டதுபோலாகவே அத்தீயானது அதிக உக்கிரத்துடன் சுகானந்தனுடைய உள்ளத்தில் எரியலாயிற்று. ஆகவே அவன் மெதுவாகச்சென்று அக்கதவைத் தன் கையால் மெதுவாகத்தள்ளித் திடீரென உள்ளே புகுந்தான். கோமளம், அவன் படுபாவி சுகானந்தனே என்று அறிந்து கொண்டதும் ஓவென்று அச்சத்தால் கதறினாள்.

கோமளவல்லி, அப்போது படுத்துக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை, ஏதோ விஷயங்களைக் கவனித்துக்கொண்டிருந்தாள். அப்போது இப்படிப்பட்ட அசந்தர்ப்பம் நேர்ந்தது. ஆகையால் அவளுடைய ஆடைகளெல்லாம் அவள் தேகத்தின்மீதே இருந்ததேயொழிய ஒன்றுவது அப்புறப் படுத்தப்பட்டிருக்கவில்லை. சுகானந்தன் ஒரு சிறுத்தையைப் போல் அவள்மீது ஒரேபாய்ச்சல் பாய்ந்து அவளது கழுத்தைச்சுற்றித் தன் கையைப் போட்டுக்கொண்டு சிறிதும் ஈவு இரக்கமின்றி "கோமளம், நீ என்னுடைய கண்மணி! இனி உன்னைக் காப்பாற்றக்கூடிய சக்தி எதுவுமில்லை" என்று கூறினான்.

ஆனால் அப்போதும் கோமளம் அவனுடன் யாதொன்றும் பேசாமல் ஓவென்று கதறினாள். இந்த இருமுறை கதறியபோதும் அவளுக்கும் தெரியாமலே அப்படிப்பட்ட பேரிரைச்சல் அவள் வாயினின்றும் கிளம்பியது. அந்த

இரைச்சலின் சத்தமானது சுவர், கூரைமுதலிய எல்லாவற்றி லும் புகுந்து சென்று வெளியில் வெகுதூரத்தில் கேட்டது. சில கஜங்களுக்கப்பாலுள்ள ரஸ்தாவில் யாரேனும் சென் றிருந்தால்கூட அவர்களுக்கு அந்த சத்தம் நன்றாகக் கேட் டிருக்கும்.

சுகானந்தனுடைய இரும்புப் பிடியினின்றும் விடுவித் துக்கொள்ள அவள் தன்னாலான பிரயத்தனங்களையெல்லாம் செய்தாள். அவன் எப்படியாவது அவளை முத்தமிடவேண்டு மென முயற்சித்தபோதெல்லாம் அவள் அவன் மயி ரைப்பிடித்து அவனது தலையை வெகுதூரம் தனக்கும் தெரி யாத சக்தியுடன் தள்ளுவாள். அப்படித் தள்ளும்போதும் ஓவென்று கதறிக்கொண்டே இருப்பாள். அப்போதும் அவன் சிறிதும் இரக்கங்கொள்ளாமல், "நீ இறைவன் அரு ளால் எனக்குக் கிட்டிவிட்டாய்" என்று ஆணவத்துடன் கூறிக்கொண்டே அவள் கதறுவதை அடக்கும் பொருட்டு அவள் வாயை மூடுவதற்காகத் தன் கையை அவள் வாயி னருகில் நீட்டினான்.

அச்சமயத்தில் ஏதோ ஒரு அறையின் கதவு படார் என்று அதிவேகத்துடன் திறக்கப்பட்ட சத்தம் கேட்டது. உடனே மறுநிமிஷமே, சுடுகாட்டினின்றும் எழுந்துவந்த பிசாசுபோல் ஒரு பெண் உருவம் கோமளவல்லியின் அறை யின் வாயிலில் வந்து உக்கிரமான பார்வையுடன் நிற்பதைச் சுகானந்தன் கண்டான். இதனால் அச்சமும் பீதியும் அடைந்த சுகானந்தன் தன் பிடியை நழுவவிட்டான். உடனே கோமள மும் அப்பிடியினின்றும் விலகி அறையின் வாயிலில் நின் றிருந்த ஸ்திரீ உருவத்தினிடம் "என் அத்தையே, என் அத் தையே" என்று கூறிக்கொண்டு ஓடினாள்.

ஆம்; அங்கே வந்துநின்ற மாது கோமளவல்லியின் அத்தையாகிய சுந்தரம்மாளே. அம்மாது தன்னுடைய இரவு ஆடையுடன் தன் கட்டிலினின்றும் எழுந்தபடியே ஓடி வந்திருந்தாள். அவள் பாரிசநோயால் கைகால் நீட்டமுடியாமலும், மயக்கமாகவும் விழுந்து மூன்று வருஷங்களாயிருந்தது. அவள் கோமளவல்லியைக் கட்டிக்கொண்டு 'கோமளவல்லி, எனதன்புள்ள கோமளவல்லி' என்று சொன்னாளேயொழிய அதற்குமேல் ஒன்றும் பேசமுடியாமல் அப்படியே மூர்ச்சையானாள்.

சுந்தரம்மாள் மூர்ச்சையாய்விட்டதால் அவன் மீண்டும் கோமளவல்லியைத் தொந்தரை செய்திருக்கலாமென்றாலும் அவனுக்கு ஒருவித அச்சம் தோன்றிவிட்டது. மூன்று வருஷங்களாகச் சித்த சுவாதீனமின்றியும், கைகால் நீட்டமுடியாமலும் இருந்த ஒருமாது திடீரென்று இப்போது எழுந்து வந்ததைக் காணவே அவன் கடவுளே தனக்கு விரோதமாக இருப்பதாகக் கருதினான். ஆகவே அவன் கோமளத்தை ஒன்றும் செய்யாமல் சரேலென்று அவ்வறையை விட்டுப் புறப்பட்டுக் கீழே இறங்கி வந்த வழியே ஓடிப்போனான். அவ்வீட்டையோ அல்லது மாடியின்மீதுள்ள அறையையோ திரும்பிப்பார்க்கவும் அவனுக்குத் தைரியமில்லை. எதுவோ பிசாசு துரத்தினால் ஓடுவதுபோல் பீதியுடன் தன் மடத்தை நோக்கி ஓடலானான்.

இப்போது நாம் சுந்தரம்மாள் என்னும் மாதுபெயருடைய மாது எப்படி அங்குவா நேர்ந்தது என்பதைக் கவனிப்போம். அவள் மூன்றுவருஷ காலமாகப் பாரிசநோயால் வருந்தி இவ்வுலகத்துக்கே பயனில்லாமல் பிணம்போல் கிடந்த விஷயம் நேயர்கள் ஞாபகத்திலிருக்குமென்றே நினைக்கிறோம். ஆகவே அந்த மூன்றுவருஷ காலத்தில் தன்னைச்

சுற்றி நடந்த விஷயங்களொன்றும் அவளுக்குத் தெரியாது. கண்களும், காதுகளும் திறந்திருந்தாலும் அவை அவளுக்குப் பயனற்றவையாக இருந்தன. அந்த நிலைமையில் உயிரற்ற பிணம்போல் கிடந்த அவளுடைய மூளையில் கோமளவல்லி கதறிய அபயக்குரல் சென்று தாக்கியது. உடனே எதிர் பாராதபடி அவள் ஒருவித சக்தியைப்பெற்றாள். தன்னைக் கட்டுப்படுத்தியிருந்த இரும்புச் சங்கிலியினின்றும் விடுபட்ட வளேபோல் விடுதலை யடைந்தாள். தனக்கும் தெரியாமலே கோமளத்தின் அறையை நோக்கி ஓடிவந்தாள். நல்ல சம யத்தில் கோமளத்தின் கற்பைக்காக்கவும், கோமளவல்லியின் அதரங்கள் அக்கொடிய பாதகனின் எச்சிலாகாமல் தடுக்க வும் அம்மாது வந்து சேர்ந்தாள். நாம் மேலேகூறியபடி அக்கொடியோனும் கடவுள் தனக்கு விரோதமாக இருப்ப தாக நினைத்துக்கொண்டு ஓடலானான்.

உண்மையிலேயே இவ்வாறு நேரும் பல சந்தர்ப்பங்கள் நமக்கு எல்லாம்வல்ல இறைவனின் ஞாபகத்தை அளிக்கின் றன. திடீரென்று கூக்குரல் சுந்தரம்மாளின் மூளையில் கேட்ட தால் அந்த நரம்பு எதிர்பாராத சக்தியைப்பெற்று அவள் எழுந்தாளென்றும் ஆகவே அது விஞ்ஞான சாஸ்திரப்படி சகஜ மாக நேரிடக்கூடியதென்றும் இதில் தெய்வீகம் ஒன்றுமில்லை யென்றும் சிலர் கூறிவிடலாம். ஆனால் எவ்வளவோ சந்தர்ப் பங்களில் இவ்வாறு நேரும்போதெல்லாம் இப்படிப்பட்ட எதிர்பாராத நன்மைகள் ஏற்பட்டுவிடுவதில்லை. ஆதலின் திக் கற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்பதுபோல் கிருபா மூர்த்தியாகிய இறைவனே ஆபத்தில் வேறுவித ரூபங்களால் தோன்றி உதவி செய்கின்றான் என்பதில் ஆட்சேபமில்லை. கோமளவல்லி கற்பிற்சிறந்த உத்தமியாதலால் அவளது கற் புக்குப் பங்கம் ஏற்படாதபடி காக்கவேண்டியது ஆபத்பாந்

தவனாகிய இறைவனது கடமையல்லவா? அவள் அப்படிப் பட்ட உத்தமியாக இல்லாமல் மனதில் சிறிது விகல்பத்தை யுடையவளா யிருந்தபோதிலும் கடவுள் உதவி அவளுக்குக் கிடைத்திராது. பொதுவாக அனைவரையும் இறைவனே காத்து ரட்சிக்கிறான் என்றாலும் யார் பூரணமாகத் தன்னை அவனிடம் ஒப்படைத்து விடுகின்றார்களோ அவர்களுக்குத் தான் அவன் உலகத்தையே எதிர்க்கக்கூடிய சக்தியையும் தருகின்றான். நான் என்னும் அகங்காரத்தையும், என்னால் எல்லாம் முடியும் என்னும் மமதையையும் விட்டுவிட்டுத் தன்னாலாவது ஒன்றுமில்லை, எல்லாம் எனையாளும் ஈசன் செயல் என நினைத்து யார் அவனிடம் அடைக்கலம் புகுந்து விடுகிறார்களோ அவர்களை இவ்வுலகமே எதிர்த்தாலும் அவன் அவ்வெதிர்ப்பினின்றும் காப்பாற்றுவான் என்பதில் எள்ளள வும் சந்தேகமே இல்லை. அதற்கு இப்போது கோமளவல் லிக்கு ஏற்பட்டதுபோன்ற ஆயிரக்கணக்கான அரிய சந்தர்ப் பங்களை உதாரணமாகக் காட்டலாம்.

இவ்வுலகில் தோன்றி அரியகாரியங்களைச் சாதித்த பெரியோர்களெல்லாம் தங்கள் வாழ்க்கையையே இறைவ னிடம் ஒப்படைத்து அவனுடைய மக்களாகிய மானிட கோடிகளுக்குச் சுயநலமின்றி உழைத்ததனால்தான் அவர் கள் செயற்கரிய பல காரியங்களைச் செய்துமுடித்தனர். இத னால் எல்லாம் அவன் செயலின்படியே நடக்குமாதலால் நாம் சோம்பிக் கிடக்கலாமென நினைப்பது தவறு. மனிதப் பிர யத்தனம் என்று ஒன்று உண்டு. அதன்படி மனிதன் நன் னோக்கத்தைக்கொண்டு தன்னாலானதையெல்லாம் செய்த பிற்பாடுதான் இறைவன் உதவி கிடைக்கும். நமது கோமள வல்லியும் இறைவன் காப்பாற்றுவானென நினைத்து சுகானந் தனை அறையில் கண்டதும் சும்மா படுத்திருந்தால் அவன்

அவளை எளிதில் மானபங்கப் படுத்திவிட்டிருப்பான். அவள் தன்மானத்தைக் காத்துக்கொள்ள உண்மையுடன் தன்னு லானவரை பாடுபட்டதனுல்தான் அவளது உண்மையையும் திக்கற்ற நிலைமையையும் கண்ட இறைவன் அவளுக்குத் துணைபுரிந்தான்.

திடீரென்று தன் அத்தை அங்குவந்து தன் கற்பைக் காத்ததைக்கண்ட கோமளம் மிக மகிழ்ச்சியடைந்தாள். மேலும் தன் அத்தை அவளுடைய நோயினின்றும் நிவர்த் திக்கப்பட்டு ஆச்சர்யப்படத்தக்க வகையில் எழுந்துவந்ததைக் கண்டு அளவிலா ஆனந்தமடைந்தாள். சுகானந்தன் ஓடிப் போனதால் அச்சமும் நீங்கிற்று. ஆயினும் வேறொரு வகை யான அச்சம் அவளுக்குத் தோன்றியது. அதாவது மூன்று வருஷத்துக்குப் பின்னர் எழுந்த தன் அத்தை மீண்டும் மூர்ச்சையாய்விட்டதால் அவள் எழுவாளோ இல்லையோ என்னும் அச்சம் அதிகரித்துவிட்டது. ஆகவே அவள் அன் புடனும் ஆதரவுடனும் தன் அத்தையைக் கம்பளத்தினின் றும் இருகரங்களாலும் மெதுவாகத் தூக்கி அருகிலிருந்த கட்டிலில் படுக்கவைத்து சிஷ்ருஷை செய்யவும் ஆவலுடன் அவளைப் பார்த்தபோது அவள் மெதுவாகக் கண்திறப்பது கண்டு சந்தோஷமடைந்தாள்.

கோமளம் தன் அத்தையின் படுக்கையினருகில் முட் டிக்கால் போட்டு உட்கார்ந்து, "ஆ! இறைவனே! இந்த நன் றிக்காக உனக்கு எனது வந்தனத்தைச் செலுத்துகிறேன்" என்ருள். அப்போது அத்தை சுந்தரம்மாள் மெல்லியகுர லில் மெதுவாக வாய்திறந்து, "கோமளவல்லி! எனதன்புள்ள கோமளம்! இப்போது என்னநேர்ந்தது. நான் ஏதோ கனவு காண்கிறேன்போ லிருக்கிறதே! இப்போது ஒரு பெரும் கூக் குரல் என் காதில்கேட்டதே அது என்னசங்கதி?" என்று கேட்டாள்.

கோமளம்:—எனதன்புள்ள அத்தையே! நீ இவ்வாறு சௌக்கியமடைந்து எனக்குதவியாய் இருப்பதற்காகக் கடவுளுக்கு வந்தனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சுந்தரம்மாள்:—ஏன்? என்னசங்கதி? இப்போது இங்கு ஏதோ அசம்பாவிதம் நடந்ததுபோல் எனக்குத் தோன்றுகிறதே. நேற்று இரவு நான் தூங்கியதாகவே எனக்குத் தோன்றவில்லை. இராச்சாப்பாடு முடிந்த பின்னர் நீயும் நானும் கற்பகவல்லியும் ஒன்றாக உட்கார்ந்து ஏதோ பேசிக்கொண்டிருந்ததாக ஞாபகம் வருகிறது. பிறகு ஒன்றுமே தோன்றவில்லை. நாம் படுக்கைக்குப் போனதாகவோ அல்லது தேயிலைப்பானம் பருகியதாகவோ ஞாபகமில்லை. பிறகு எல்லாம் சூன்யமாகவே தோன்றுகிறது. ஆனால் கோமளம் நீ ஏன் இப்படிக் கண்ணீர்விட்டு அழுதுகொண்டிருக்கிறாய்? என்ன நடந்தது? எல்லாம் விவரமாகச்சொல். என்னிடம் வா.

கோமளவல்லி ஏதோ பேசமுயன்றும் அவளால் பேச முடியவில்லை. துக்கம் வந்து அடைத்துக்கொண்டது. மூன்று வருஷங்களுக்கு முன் ஒருநாள் இரவு நடந்த விஷயத்தைப்பற்றித் தன் அத்தைபேசியதை நினைத்தபோது இடையில் இவ்வளவுகாலம் அவள் நோயுடன் இருந்ததும், தனக்கும் தனது தமக்கைக்கும், நேர்ந்த விஷயங்களும் அவள் நினைவிற்கு வரவே அவளுக்குத் துக்கம் அதிகரிக்கவே அவளால் பேசமுடியாமற் போயிற்று. எனினும் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "இவ்வளவுகாலமாக நீ நோயுடன் இருந்தாய்" என்று கூறினாள்.

சுந்தரம்:—அப்படியா! அதிக நோயுடன் இருந்தேனா? ஆம்; எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. ஏதோ

நீண்டகாலமாக அதிக காயலாவால் தாக்கப்பட்டு எழுந்ததாகவே தோன்றுகிறது.

கோமளம்:—ஆம்; நீ சென்ற மூன்று வருஷங்களாக இவ்வாறு நோயால் வருந்தினாய். இப்போது திடீரென்று இறைவனருளால் உணர்வுபெற்றுச் சுகமடைந்து எழுந்தபோது அந்த மூன்று வருஷங்களுக்கு முன் ஒரு சம்பவத்தைப்பற்றி நேற்று நடந்ததுபோல் பேசுவதைக் காண எனக்குத் துக்கம் அதிகரித்து நான் அழுதேனே தவிர வேறொன்றுமில்லை. இப்போது நான் அழுகையை நிறுத்திவிட்டுச் சந்தோஷத்துடன் இருக்கிறேன். உண்மையிலேயே இப்படிப்பட்ட சந்தோஷ நிலைமையை உண்டாக்கியதற்காக நான் இறைவனுக்கு மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

சுந்:—நானும் அந்த எல்லாம்வல்ல இறைவன் என்னைச் சொஸ்தப் படுத்தியதற்காக அவனுக்கு வந்தனம் செலுத்துகின்றேன். ஏனெனின் நீயும் கற்பகவல்லியும் சுகமாகவாழ இன்னும் சொற்பகாலம் என் உதவி அவசியமா யிருக்கிறதல்லவா? சரி; கற்பகவல்லி எங்கே? அவளை அழைத்துக்கொண்டு வா. அவளை அணைத்துக் கொள்ள வேண்டுமென்று மிக ஆவலாக இருக்கிறேன்.

கோம:—அன்புள்ள அத்தையே! இப்போதே அதிக சிரமத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம். ஏனெனின் நான் உன்னிடம் பல விஷயங்களை விவரமாகச் சொல்ல வேண்டி யிருக்கிறது.

சுந்:—அப்படிக் கெட்ட சம்பவங்களொன்றுமில்லையே. ஏதேனும் ஆபத்து நேரிட்டு [illegible]கா.

கோம:—இல்லை; அப்ப[illegible] ஒன்றுமில்லை. நா[illegible] சம்பந்தப்பட்டவரையி[illegible] எல்லாம் சௌகரியமாகவே இருக்கிறது.

186560.

சுந்:—அப்படியானுல் கற்பகவல்லி எங்கே? அவளை ஏன் அழைத்துக்கொண்டு வரமாட்டேன் என்கிறுய்.

கோம:—அன்புள்ள அத்தையே! கற்பகம் இப்போது இங்கு இல்லை. சென்ற ஒருவருஷகாலமாக இரத்தினபுரியில் நல்ல நண்பர் வீட்டில் சௌக்கியமாகவே இருந்து வருகிறுள். நீ இப்போது அவசரப்பட்டு ஒன்றும் கேட்கவேண்டாம். நான் நிதானமாக எல்லாம் விவரமாகக் கூறுகிறேன். இப்போது களைப்பாறு.

சுந்:—அப்படியல்ல. நீங்கள் சௌக்கியமாய் இருக்கிறீர்களா என்று நான் அறிந்துகொள்ள வேண்டாமா? நான் நோயுடன் இருந்தகாலத்தில் எல்லாம் நீங்கள் எவ்வாறு காலங்கடத்தினீர்கள் என்பதை விவரமாய்க்கூறு. என் ஆவல் விஷயம் தெரியாதமுன் அடங்கிவிடாது. ஆதலால் தாமதமின்றி நீங்கள் எப்படி வாழ்க்கையை நடத்தினீர்கள் என்பதை அறிவித்துவிடு.

கோமளம்:—அத்தையே! நீ இரத்தினபுரியிலுள்ள பச்சையப்ப பிள்ளையிடமிருந்து மாதவாரி பணம் பெற்றுக்கொண்டிருந்ததாக நாங்கள் விசாரித்துத் தெரிந்துகொண்டு இப்போதும் அவரால் கட்டப்பட்ட பணத்தினின்றுமே பாங்கிலிருந்து அனுப்பப்பட்டு நாம் பெற்றுக்கொள்கிறேம்.

சுந்தரம்:—ஆ! அப்படியானுல் மிக சந்தோஷம். நீங்கள் பணத்துக்குக் கஷ்டப்படாமல் இருப்பதை யறிய சந்தோஷப்படுகிறேன். நான் உன்னை நன்றாகப் பார்க்க விரும்புகிறேன். நீ இ[illegible]ந்த வெளிச்சத்தில் வந்து நில். எனக்கு இப்போது கண் நன்றாகத் தெரிகிறது போலவே தோன்றுகிறது. ஆ! நீ என்ன அழகுடன்

வளர்ந்துவிட்டாய்! இப்போது உனக்கு வயது இருபது. நீ எவ்வளவு அழகுடன் இருக்கிறாயோ அவ்வளவு கண்யமாகவும் இருப்பதாகத் தெரிகிறது. சமீபத்தில் வா. என்னை அணைத்துக்கொள். நான் உங்களை எப்படிக் காணவேண்டுமென்று நினைத்தேனோ அப்படி நீ இருப்பதைக் காண எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது.

கோமளவல்லியும் தன் அத்தையை அணைத்துக்கொண்டு முத்தமிட்டாள். இருவரும் பரஸ்பரம் சந்தோஷமடைந்தனர். சிறிதுநேரத்துக்குப் பிறகு அத்தை சுந்தரம்மாள் வாய் திறந்து, "அதிருக்கட்டும்; ஏதோ கூச்சலோடும் சத்தம் கேட்டதே. அது என்ன? மேலும் இங்கே யாரோ ஒரு மனிதன் இருந்ததுபோல் தெரிந்ததே" என்றாள்.

கோம:—ஆமாம்! ஒரு அயோக்கியன். எப்படியோ என் அறையில் புகுந்துவிட்டான்.

சுந்தரம்:—யார் அவன். அப்படிப்பட்டவன் உன் அறையில் வரவேண்டிய காரணம் என்ன?

கோம:—அத்தையே! நான் சொல்லப்போவதை நீ நம்ப மாட்டாய். இந்த கந்தபுரியைச்சேர்ந்த மடத்தில் குருவாய் இருக்கும் சுகானந்தனே என்னைக் கெடுக்கும் பொருட்டு என் அறையில் புகுந்து விட்டான்.

சுந்:—அப்படியா! இதுவும் உண்மையாக இருக்க முடியுமோ? நமக்கு அருகிலிருக்கும் சுகானந்தனா இப்படிச் செய்தான்?

கோம:—ஆம்; அவன்தான் வந்தான். சென்ற சில நாட்களாகவே அவன் முயற்சி செய்துகொண்டிருக்கிறான். நீ ஏன் என்னை இப்படிப் பார்க்கிறாய்? நான் கூறுவது பொய் என்று நினைக்கிறாயோ?

சுந்:—அன்புள்ள கோமளம்! நான் ஒருகாலும் உன்பேச்சில் சந்தேகம் கொள்ளமாட்டேன். ஏனெனின் சுகானந்தனைப்பற்றி நான் முன்னமே கேள்விப்பட்டிருப்பதால் எனக்கு ஆச்சர்யமாகப் போய்விட்டது. அதற்காக அப்படிப் பார்த்தேனே தவிர வேறொன்றுமில்லை.

கோம:—அத்தையே! நான் அவனிடம் பலமுறை அகப்பட்டுக்கொண்டு அவஸ்தைப்பட்டேன். ஒருமுறை என்னை மடத்தைச்சேர்ந்த பூமியில் இருக்கும் ஒரு அறையினும் என்னைக் கொண்டுபோய் வைத்துவிட்டான். பிறகு எப்படியோ சமாளித்துக்கொண்டு வந்துவிட்டேன். பிறகு ஒருமுறை என்னை அவன் பிடித்த போது ஒரு வாலிபன் என்னைக் காப்பாற்றினான். அவனைப்பற்றி நமது கற்பகவல்லியும் விவரம் விசாரித்திருக்கிறாள். அவன் ஒழுக்கத்திற் சிறந்தவன்.

சுந்:—ஓ! எனக்குத் தெரிந்துவிட்டது. நீ அந்த வாலிபனை நேசிக்கிறாய் போலும்! எனதன்புள்ள பெண்ணே! நீ கூறுகிறபடி அவன் பெருந்தன்மையுள்ளவனாய் இருப்பானாயின் அவனுடன் நியாயவழியில் நேசிப்பதில் குற்றமொன்றுமில்லை.

கோம:—அத்தையே! ஜகதீசனைப்பற்றி நீ நேரில் அறியும் போது நான் கூறியவனைத்தும் உண்மையே என்பது புலனாகும். அவன் விரைவில் இங்கு வருவான். இன்று காலைகூட எனக்கு ஒருகடிதம் வந்திருக்கிறது. அவன் பரிதிபுரத்தில் ஒரு நல்ல வேலைக்காக இருந்துகொண்டிருக்கிறான். அவ்வேலை விரைவில் முடிந்துவிடும். அவன் உடனே புறப்பட்டு இரத்தினபுரிக்கு வருவான். அவனுடைய பெயர் ஜகதீசன் என்பதல்ல.

சுந்:—என்ன! ஏதோ பயங்கரமான விஷயத்தை யெல்லாம் சொல்கிறுயே. அவன்பெயர் மாற்றிக்கொள்ள வேண்டிய காரணமென்ன.

கோம:—இதற்கெல்லாம் அச்சப்படாதே. கெட்ட எண்ணத்துடன் அவன் தன் பெயரை மாற்றிக்கொள்ளவில்லை. எனக்கும் அவனுக்கும் விவாகம் நடக்கும்போது எல்லா விவரங்களையும் பூர்த்தியாகச் சொல்லிவிடுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறுன். அவன் ஏதோ குடும்ப விவகார காரணமாய்த் தன் பெயரை மாற்றி வைத்துக் கொண்டிருக்கிறுன். உண்மையிலேயே நான் அவனை நம்புவதால் ஒன்றும் சந்தேகப்படாமல் அவனுகச் சொல்லும்வரை காத்திருப்பதென நிச்சயித்துவிட்டேன். அவனுடைய கடிதங்களையெல்லாம் உனக்கு நாளையதினம் காண்பிக்கிறேன். அப்போதுதான் அவனைப்பற்றி உனக்கு நல்லபிப்பிராயம் ஏற்படும்.

சுந்:—குழந்தை! உனக்கு எவ்வளவுகாலமாக அவனைப்பற்றித் தெரியும்.

கோம:—சுமாராய் ஒருவருஷமாகத்தான் தெரியும். சில தினங்களுக்கு முன்னரே விவாகம் செய்துகொண்டு வருவதென எண்ணினேம். அப்போது உன்னைப்பற்றியும் அவன் அதிக அக்கரைகாட்டினுன். இரத்தினபுரியின் வடபாகத்தில் நாம் வாழ்வதற்காகவென்று அவன் ஒரு புதிய கட்டடத்தைக் கட்டி இருக்கிறுன். உன்னையும் அங்கேயே அழைத்துப்போவதென முடிவு செய்திருந்தான்.

சுந்:—நீ இப்போது கூறுவதையெல்லாம் கேட்க எனக்கு மிகவும் சந்தோஷமாகத்தான் இருக்கிறது. நீ கூறும்

அந்த வாலிபன் மிக யோக்கியனும் நல்லவனும் தான் இருப்பானென நம்புகிறேன். மேலும் இப்போது நாம் நினைப்பதைவிட அவன் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவனாகவும் இருக்கக்கூடும்.

கோம:—கற்பகவல்லியும் சமீபத்தில் எழுதிய ஒரு கடிதத்தில் அவன் உயரிய குடும்பத்தைச்சேர்ந்தவன் என்பதை ஒருவாறு சுட்டிக் காட்டியிருக்கிறாள். ஆயினும் எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. அவன் ஒரு இளவாசனாகவே இருந்தாலும் இப்போது அவனை நேசிப்பது போலவே அப்போதும் நேசிப்பேன். அவன் என் பரிதிபுரம்போய் அவஸ்தைப்படுகிறான் என்னும் விவரம் அறிந்தால் அவனது குணாதிசயத்தைப்பற்றி ஆச்சர்யப் படுவாய்.

சுந்:—என்ன, அப்படிப்பட்ட காரியம் என்பதை விவரமாகச் சொல். நான் தளர்ந்துவிடவில்லை. இன்னும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருக்கலாம்.

கோம:—நமது இரத்தினபுரி இளவாசிக்கு விரோதமாகச் செய்யப்படும் சூழ்ச்சியை முறியடிக்கவே அவன் அங்கு சென்றிருக்கிறான். அச்சூழ்ச்சியில் சில யௌவன மாதர்களும் கலந்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் யாரோ மரகதவல்லியின் புத்திரிகளாம். விவரம் பூராவும் இனித்தான் தெரியும்.

சுந்தரம்:—ஆ! மரகதவல்லியா! அப்பெண்களின் பெயர் என்ன உனக்குத் தெரியுமானால் சொல் பார்ப்போம்.

கோம:—அவர்களுடைய பெயரா! இரங்கம்மாள்! அம்புஜம்.

சுந்தரம்:—போ[illegible] ஓ! அவர்கள் தான் தெரிந்[illegible]

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922௵ பிப்ரவரி௴ 1௳ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" "இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" "சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம், 4-ம் பாகம் நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரி ரகசியம் 5-ம்பாகம் என்கிற நாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரி௴ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3		0
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

“ஆனந்தபோதினி”

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ளு ஜூலையீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-8-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூபா	
இரத்தினபுரி இரகசியம் 5-பாகமும் ...	10	0	தினகரசுந்தரி	1	0
பவளத்தீவு 2-பாகமும்...	3	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
கற்கோட்டை ...	2	0	ரத்தினாபாய்	1	12
மின்சார மாயவன் ...	1	8	வீரநாதன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	குணசுந்தரன் ...	0	12
கனகபூஷணம் 2 பாகம்...	3	8	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
இராஜாமணி ...	2	0	கமலசேகரன் ...	1	12
ஆனந்தஸிங் ...	2	0	பூங்கோதை ...	0	10
மதனபூஷணம் ...	1	0	இந்திராபாய் ...	2	8
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ...	9	10	அமராவதி 2 பாகமும்	4	0
			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
			லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,
6. லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.